# அரசு ஊழியர்

ஜூன் 2019

மலர் : 40 இதழ் : 6

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடா ஒரு கோப்பை சூப்

## இது உனக்கும் எனக்கும் தான்

பாதிக்கப்பட்ட பின்
போராடத் துணிந்தால்
நீ என்ன புரட்சிக்காரன்?

பழி வாங்குவதற்காக மட்டும்
ஆயுதம் ஏந்துபவனா
சமூகக் காவலன்?

உசுப்பி விட்டால் தான்
எழுந்திருப்பேன் என்றால்
நீயா போர் வீரன்?

ஓர் அபயக்குரல் போதா
போர்ப்பரணி பாட
சகாவிற்கு இழைக்கப்படும்
ஓர் அநீதி போதாதா
யுத்தம் செய்ய!

சுய இழப்புக்காய் காத்திராதே
சுயரூபம் காட்டாமல்
சும்மா இருந்தால்
சுயத்தை இழந்து விடுவாய் தோழனே!

**- சேயோன் யாழ்வேந்தன்**

# நாடாளுமன்றத் தேர்தலில் நமது வாக்குரிமை

**ந**டைபெற்று முடிந்த 17வது மக்களவைத் தேர்தலில் தமிழ்நாடு அரசு ஊழியர்களின் பங்கு என்பது குறிப்பிடத்தக்கது. மத்தியில் ஆட்சி அமைந்தது ஒருபுறம் இருந்தாலும் தமிழகத்தில் நடைபெற்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஜாக்டோஜியோ போராட்டம் என எண்ணற்ற போராட்டங்களை நமது தலைமையின்கீழ் ஏராளமாக நடத்தியதன் விளைவு இதுவரை இல்லாத அளவில் தமிழக அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர், அவர்தம் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மௌனப் புரட்சி நடத்தியதால் தமிழகத்தில் ஆளும் அரசு ஒரு இடத்தைத் தவிர மற்ற இடங்களில் எதிர்க்கட்சி கைப்பற்றியுள்ளது என்பதை தமிழக அரசு எண்ணிப் பார்க்க வேண்டும்.

இனிமேலாவது இதனை கருத்தில் கொண்டு அரசு ஊழியர்களின் நலனை புறக்கணிக்காமல் சங்கத் தலைவர்களோடு சுமூகமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தி அவர்தம் கோரிக்கைகளை நிறைவேற்றுவதுதான் சாலச் சிறந்தது. இந்த ஆட்சி மட்டுமல்ல இனி எந்த ஆட்சி தமிழகத்தில் அமைந்தாலும் இதனை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

இதுமட்டுமின்றி தமிழகத்தில் நடைபெற்ற மாணவர், இளைஞர், மாதர், அரசு ஊழியர், ஆசிரியர் என அனைத்து தரப்பினரும் கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் ஏராளமான போராட்டங்களை நடத்தியுள்ளனர். இந்தியாவில் இதுவரை இந்தளவுக்கு போராட்டம் நடைபெற வில்லை என தமிழக முதலமைச்சரே ஒப்புக் கொள்கிறார்.

அதுமட்டுமின்றி நீதிமன்றங்கள் கூறிய கருத்துக்கும் செவி சாய்க்காமல், பழைய ஓய்வூதிய திட்டத்திற்காக அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை வெளிப்படைத் தன்மை இல்லாமல் ஜனநாயக ரீதியில் நடைபெற்ற போராட்டத்தின்போது அரசு ஊழியர்களை சிறையில் அடைத்து, அவர்களுக்கு 17பி, சஸ்பென்ஷன், நிபந்தனை ஜாமீன் போன்ற பழிவாங்கும் நடவடிக்கையில் தமிழக அரசு ஈடுபட்டது. முதல்வர், இடதுசாரி அமைப்புகள் உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகள், அமைப்புகள் மற்றும் பள்ளி குழந்தைகளின் நலன் கருதி போராட்டத்தை தற்காலிகமாக திரும்பப் பெற்றாலும் இன்று வரையிலும் தொடரும் தமிழக அரசின் மிரட்டலும், தனது மத்திய அரசுக்கு எதிராக ராஜ விசுவாசத்தை வெளிப்படுத்தியதன் விளைவுதான் நாடாளுமன்ற தேர்தல் முடிவு என்பதை ஆளும் ஆட்சியாளர்கள் உணர வேண்டும். ❖

# நிகழ்ந்தவை யாவும் நியூட்டனின் மூன்றாம் விதிப்படியே!



**17**வது மக்களவைத் தேர்தல் முடிவுகள் தமிழகத்தைப் பொறுத்தவரை 2006 ஆண்டு நடந்த சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளையே நினைவு படுத்துகிறது நமக்கு. 2003ல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தங்கள் உரிமைகளுக்காக பலகட்ட போராட்டங்கள் நடத்தி எதுவும் சாத்தியமாகாத நிலையில் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்ட போது ஒரே அரசாணையில் சுமார் 1,76,000 அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை பணி நீக்கம் செய்து உத்தரவிட்டார் அப்போதைய முதல்வர் ஜெயலலிதா. பணி நீக்கத்தோடு அதிகாரப் போக்கு நிற்கவில்லை போராட்டம் நடத்திய அரசு ஊழியர்கள் மற்றும் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை வீடு புகுந்து கைது செய்து தாறுமாறாக வழக்குகள் புனையப்பட்டதும், பெண் அரசு ஊழியர்களைக் கூட விட்டு வைக்காமல் கைது செய்து சிறையில் அடைத்ததும் வரலாறு. பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் உச்சநீதிமன்ற தீர்ப்பின் வாயிலாக மீளப் பணியமர்த்தப்பட்டதும் அதன்பிறகு வந்த நாடாளுமன்றம் மற்றும் சட்ட மன்றத் தேர்தலில் ஜெயலலிதா அவர்களின் அதிமுக ஆட்சிக்கு எதிராக அரசு உழியர்கள் ''பகை முடிக்கும் பணி முடிப்போம்'' என பிரச்சாரம் செய்து அதிமுக ஆட்சியை படுதோல்வி அடைய வைத்த சாதனையைச் செய்ததும் நாடறியும். அந்த வீழ்ச்சிக்குப் பின்னர் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் வலிமையை ஜெயலலிதா அம்மையார் முழுமையாக உணர்ந்து கொண்டதும், அதன்பிறகு அரசு ஊழியர்களின் கோரிக்கைகளில் நியாயமாக நடந்து கொண்டதும் நாமும் அறிவோம், நாடும் அறியும்.

கிட்டத்தட்ட 2006 தேர்தல் நிலையே இப்போது திரும்பியுள்ளது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். அப்போது நடந்தது சட்டமன்றத் தேர்தல். இப்போது நடந்திருப்பது பாராளுமன்றத் தேர்தல். அன்றைய முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் வெறும் 2 சதவீதம் பேர்தான் அவர்கள் எனக்கு வாக்களிக்காவிட்டால் கவலை கிடையாது என்று சொன்னதோடு அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்தினால் எஸ்மா டெஸ்மா போன்ற சட்டங்கள் பாயும் எனவும் சட்டப்பேரவையில் கொக்கரித்தார். அப்படி கொக்கரித்த ஜெயலலிதா அவர்கள் அடுத்து வந்த தேர்தலுக்குப் பின்னர் அடங்கிப் போன வரலாறை இப்போது அதிமுக அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் படிக்க வேண்டிய அவசியம் வந்துள்ளது. அன்று சட்டமன்றத் தேர்தலில் வென்றது வெறும் இரண்டு தொகுதிகள் மட்டுமே. ஆனால் இன்று வென்றது ஒரே ஒரு தொகுதி மட்டுமே. 22 தொகுதிகளில் நடந்த இடைத்தேர்தலில் 13 இடங்களை திமுக வென்றிருக்க, 9 தொகுதிகளை மட்டுமே அதிமுக கைப்பற்றியிருக்கிறது. ஆனாலும் அந்த 9 இடங்களின் வெற்றியானது மக்களின் எதிர்ப்பை மீறி ஆளுங்கட்சியின் அதிகாரத்தின் மூலமாகவும் வாரி இறைக்கப்பட்ட பணத்தின் வாயிலாகவும் தேர்தல் ஆணையத்தில் உதவியினாலும் பெறப்பட்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டுகளை சாதாரணமாக புறந்தள்ளிவிட முடியாது.

### நடந்தவை எல்லாம் 'விதி'ப்படிதான்!

எல்லாம் விதிப்படித்தான் நடக்கும் என்று கிராமங்களில் பழமொழி சொல்வார்கள். இந்தத் தேர்தல் முடிவுகளும் விதிப்படித்தான் வந்துள்ளது. ஆமாம் நியூட்டனின் மூன்றாம் விதிப்படி. ஆன்மிக விதிகளின் பேரிலும் ஆகம விதிகளின் பேரிலும் நம்பிக்கை கொண்டு மதவாத பாஜகவுடன் கூட்டணி அமைத்த அதிமுக, அறிவியல்படியான விதிகளை கவனிக்கத் தவறி விட்டது என்பதை தேர்தல் முடிவுகள் காட்டியுள்ளன. ஒவ்வொரு விசைக்கும் சமமான எதிர்விசை உண்டு என்ற நியூட்டனின் மூன்றாவது விதி அதிமுகவின் கூட்டணிக் கணக்குகளையும், ஆட்சியின் மீதான நம்பிக்கையையும் உடைத்தெறிந்திருக்கிறது. அரசு ஊழியர்களை ஆசிரியர்களை இந்த அரசு புறக்கணித்தன் விளைவு இன்று அதிமுக என்ற கட்சியை மக்கள் புறக்கணிக்க அவர்கள் காரணமாய் இருந்திருக்கிறார்கள் என்பதை நாடு அறிந்திருக்கிறது.

### உண்மையில் புறக்கணிக்கப்பட்டவர்கள் யார்?




அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தேர்தல் பணி செய்தால் அவர்கள் எதிர்கட்சிகளுக்கு எதிராக வேலை செய்வார்கள் என்று ஆளும் அதிமுக ஆட்சியாளர்கள் கொச்சைபடுத்திய விளைவுகளுக்கு இன்று சரியான கூலி கொடுத்திருக்கிறார்கள் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும். சீப்பை ஒளித்து வைத்துவிட்டால் கல்யாணத்தை நிறுத்தி விடலாம் என்ற கனவில்தான் முதல்வரும் பிற அமைச்சர்களும் மிதந்தார்கள், அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும்

தேர்தல் பணி செய்யாவிட்டால் என்ன, தேர்தல் பிரச்சாரம் செய்து இந்த அரசுக்கு எந்த நெருக்கடியை ஏற்படுத்த வேண்டுமோ அந்த நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழ் திரைப்படங்களில் பெரும்பாலும் ஒரு காட்சியை பார்ப்போம், தன்னிடம் அடிபட்டு உதைபட்டு கதிகலங்கி நிற்கும் வில்லனை ஹீரோ உடனடியாக சாகடித்து விடமாட்டான். ''இனிமேல் ஒழுங்கா நடந்துக்கோ'' என்று எச்சரிக்கை செய்து அனுப்புவான். அந்த எச்சரிக்கைதான் இப்போது 9 தொகுதிகளில் அதிமுக பெற்றுள்ள வெற்றியின் அர்த்தமும். அரசு இன்னும் இரண்டு ஆண்டுகள் தொடர மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பு ஹீரோ வில்லனுக்கு செய்துள்ள எச்சரிக்கையே அன்றி ஒப்புதல் அல்ல. இனிமேலும் ஆட்சியாளர்கள், மக்களின், அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை போராட்டங்களை அழைத்துப் பேசி உரிய முடிவுகள் எடுத்து நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். அப்படிச் செய்யாமல் பழையபடியே, மக்களும் நிர்வாகமும் எப்படிப் போனால் என்ன, எங்களுக்குத் தேவையான கமிஷன் கிடைத்தால் போதும் என்கிற வியாபாரத்தைத் தொடர்ந்தால் இந்த ஆட்சி இரண்டு ஆண்டுகளுக்குள்ளாவே முடிவு பெற்றுவிடக்கூடிய சாத்தியக்கூறுகள் தோன்றிவிடும் என்பதை மக்கள் இன்னும் தீர்க்கமாக புரிய வைக்க அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய நிலை எழும். இதை இனிமேலாவது அதிமுக ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

### இது எங்க ஏரியா உள்ளே வராதே!

'மோடியின் இந்தியா' வரைபடத்தில் தமிழகம், ஆந்திரம் மற்றும் கேரளா மாநிலங்கள் இப்போது இல்லாமல் போயிருக்கின்றன. இதற்கு காரணம் மோடியின் மதவாத அரசியலை தென்னிந்திய மக்கள் தெளிவாக புரிந்து கொண்டதுதான். பெரியார் வளர்த்த பகுத்தறிவும், அண்ணா வளர்த்த திராவிடமும், காமராஜர், அண்ணா, கருணாநிதி போன்ற பெருந்தலைவர்கள் கட்டிக்காத்த சமூகநீதியும், பொதுவாழ்வில் நேர்மை, தூய்மை, வாய்மை போன்றவற்றை கடைபிடித்துவரும் உதாரணபுருஷர்களும் இடதுசாரி இயக்கத்தின் ஒப்பற்ற தலைவர்களான சங்கரய்யா நல்லகண்ணு போன்றவர்கள் இன்றளவும் உழைப்பாளிகளின் உரிமைகளுக்காக நடத்தி வரும் சமரசமில்லா போராட்டங்களும், இவற்றையெல்லாம் உடைக்கப்பார்க்கும் மோடியின் அதிகாரத்தை தூள் தூளாக்கியிருக்கின்றன. திராவிடமும், பகுத்தறிவும், சமூகநீதியும், உரிமைமீட்புப் போராட்டங்களும் தழைத்தோங்கிய தமிழ்நாட்டில் சாதியவாத, மதவாத மற்றும் பிரிவினைவாத சக்திகளை, ''இது எங்க ஏரியா உள்ளே வராதே'' என்று விரட்டியடித்திருக்கிறார்கள் தமிழக மக்கள். தமிழகத்தின் மீது அதிகாரத்தை செலுத்தி ஆட்சியை பிடிக்கலாம் என்ற மோடியின் வியூகத்தை மக்கள் தகர்த்தெறிந்திருக்கிறார்கள். மத்திய ஆட்சியின் மதவாத கொள்கைகளுக்கு தலையாட்டி, தங்கள் சுயலாபங்களுக்காக தமிழகத்தின் உரிமைகளையும் நலன்களையும் அடகுவைத்துவிட்ட அதிமுக ஆட்சியாளர்களின் செயல்பாடுகளையும், தமிழகத்தில் கோலேச்சவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக அதிமுக அமைச்சர்களின் வீடுகளில் ரெய்டுகள் நடத்தி அவர்களை தங்கள் அடிமைகளாக மாற்றிக்கொண்டு ஊழல் அமைச்சர்கள் மீதும் அதிகாரிகள் மீதும் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத மோடியின் அரசியல் தமிழகத்தை பொறுத்தவரை நகைப்பிற்கிடமான சாணக்கியத்தனமாகியிருக்கிறது. மக்களுக்கான உரிமைகளை தேவைகளை செய்துதராமல் வெறும் அதிகாரத் தோரணை மற்றும் ஆணவ மமதைகளினால் அரசியல் மாற்றங்களை ஏற்படுத்திவிடலாம் என்று எண்ணிய மத்திய மாநில அரசுகள், பகுத்தறியும் மக்கள் இருக்கும் தமிழ்நாட்டில் ஒரு துரும்பைக்கூட கிள்ளிவிடமுடியாது என்பதை இன்னொருமுறை ஆணித்தரமாக பதிவு செய்திருக்கிறது மக்கள் தமிழகம். இனிமேலாவது பாகுபாடு பார்க்காமல், நீதிநேர்மை காத்து, வடஇந்திய மனப்பான்மையில் இருந்து வெளியே வந்து தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து நியாயப்படி செயல்படுவாரா நரேந்திரமோடி என்பதில்தான் இருக்கிறது தமிழகத்தில் பாஜகவின் எதிர்காலம். அதேபோல நரேந்திர மோடியின் கால்களில் விழுந்து அடிமை சேவகம் செய்யும் எடப்பாடி பழனிச்சாமியும், பன்னீர் செல்வமும் தங்கள் நிலைகளை மாற்றிக்கொண்டு தமிழகத்தின் உரிமைகளை மத்திய அரசிடம் மார்தட்டி கேட்டுபெற வேண்டும் என்றே தமிழக மக்கள் நினைக்கிறார்கள். சுய லாபங்களுக்காக தமிழகத்தின் சுயத்தை மத்திய அரசிடம் மீண்டும் மீண்டும் இவர்கள் அடகு வைப்பது தொடர்ந்தால் ஈபிஎஸ்ஸையும் ஓபிஎஸ்ஸையும் தமிழக மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்வது நல்லது.

### வியூகம் வகுக்காத காங்கிரஸ், விட்டுத்தராத எதிர்கட்சிகள்!

மோடியின் கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியில் வேலையில்லாத் திண்டாட்டம், விவசாயிகளின் பிரச்சனைகளை கண்டுகொள்ளாமை, கல்வி மற்றும் சுகாதார வசதிகளில் சீர்கேடு, பெண்கள் மீதான தாக்குதல்கள், மத அடிப்படையிலான நம்பிக்கையின் பேரில் பிற மதத்தினர் மீதான தாக்குதல்கள், சிறுபான்மையினர் மற்றும் தலித்துகளின் உரிமைகளை சீர்குலைத்தல் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து

மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தேர்தலின் போது எதிர்கட்சிகள் இவற்றை பெரிது படுத்த முடியாத வண்ணம் அல்லது பெரிது படுத்தினாலும் அவை எடுபடாத வகையில் நாட்டின் பாதுகாப்புக்கு சிறந்த பாதுகாவலர் மோடி என்ற பிரச்சாரமும் பாகிஸ்தானின் அத்துமீறல்களுக்கு சரியான பதிலடி கொடுப்பவர் மோடியே என்ற பிம்பம் பெரிதுபடுத்தப்பட்டு பாஜக இல்லாவிட்டால் இந்தியாவின் பாதுகாப்பு கேள்விக்குரியதாகிவிடும் என்ற பிரச்சாரமும் அண்டை நாடுகள் நம் நாட்டின் மீது ஏவும் அச்சுறுத்தல்களும் அதிகமாகவிடும் பரப்புரையும் நாடெங்கிலும் மேற்கொள்ளப்பட்டன. பலம்பொருந்திய ஆளும்கட்சியை எதிர்க்கும்போது அதற்கு தலைமையேற்பது யார் என்பதிலேயே எதிர்கட்சிளின் பலவீனம் தெரிந்துவிட்டது. பாஜகவில் மோடிதான் பிரதமர் என்ற பிரச்சாரம் சென்ற தேர்தலிலேயே எடுபட்ட நிலையில் இந்த தேர்தலில் அதை உடைத்தெறியும் வியூகம் எதிர்க்கட்சிகளால் வகுக்கப்படவில்லை என்கிற நிதர்சனம்தான் இந்தியா முழுவதிலும் எதிர்கட்சிகளின் படுதோல்விக்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டது. எல்லோரும் குறைந்தபட்ச உடன்பாட்டுடன் இணைந்து நின்று தேர்தலை சந்தித்திருந்தால் இத்தனை பெரிய படுதோல்வி ஏற்பட்டிருக்காது. தந்திரங்கள் இல்லாத வியூகங்களோ வியூகங்கள் இல்லாத தந்திரங்களோ அரசியல் களத்தில் வென்றதில்லை. பாஜகவை எதிர்த்து நின்ற காங்கிரஸும் சரி, மற்ற கட்சிகளும் சரி, தந்திரங்கள் இல்லாத வியூகங்களை வகுத்தார்கள். யார் பெரியவர் என்ற போட்டியை அவர்கள் தேர்தலுக்கு முன்னமேயே நடத்த துவங்கி விட்டனர். மேலும் காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி வட இந்திய மாநிலங்களில் சரியான வகையில் கூட்டணியை அமைக்கக்கூடிய ராஜ தந்திரத்தை மேற்கொள்ளவில்லை. மோடிக்கு ஒரு அமித் ஷா போல ராகுல்காந்தியை வழிநடத்த சரியான தலைவர்கள் யாரும் காங்கிரஸில் இல்லாமல் போனதும் காங்கிரஸின் படுதோல்விக்கு பலமான காரணமாகும்.

### மாற்றத்தில் தபால் வாக்குகளுக்கும் மகத்தான பங்குண்டு!

இந்தத் தேர்தலில் அரசு ஊழியர்கள் மக்களிடம் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்ட அதே வேளையில் தேர்தல் பணிகளில் ஈடுபடும் அரசு ஊழியர்கள் தங்கள் தபால் வாக்குகளை தவறாமல் செலுத்தவேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி வந்தது. அதற்கு இந்தத் தேர்தலில் கணிசமான பலனும் கிடைத்துள்ளது. தமிழகத்தில் நடந்த தேர்தலுக்கான பணியில் 4,35,003 பேர் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களில் 4,10,000 பேர் தங்களது வாக்குகளை தபாலில் செலுத்தியுள்ளனர் என்பது மிகவும் பாராட்டுக்குரிய விஷயமாகும். இவற்றில் 3,97,391 வாக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கையில் மக்களவைத் தொகுதிக்கான வாக்குகளில் 1,37,379 வாக்குகள் காங்கிரஸ்-திமுக கூட்டணிக்கு கிடைத்துள்ளது. அதிமுக கூட்டணிக்கு வெறும் 39,458 வாக்குகளே சென்றுள்ளன. சட்டப்பேரவை இடைத்தேர்தலில் 22 தொகுதிகளில் திமுகவுக்கு 15,447 தபால் வாக்குகளும் அதிமுகவுக்கு 4,484 தபால் வாக்குகளும் கிடைத்துள்ளன. இதன்மூலம் அரசு ஊழியர்கள்,ஆசிரியர்கள் அதிமுக என்ற மக்கள் விரோத ஆட்சியை வேரறுக்க நினைத்துள்ளார்கள் என்பது நிரூபணமாகியுள்ளது. இது அகில இந்திய அளவில் பார்க்கப்பட்டிருக்கும் ஒரு செய்தியாகும்.

### நடந்தவைகளும் இனி நாம் நடத்த வேண்டியவைகளும்

இந்தியாவில் பெரும்பான்மை மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் எல்லாம் மண்ணைக் கவ்விய நிலையில் தமிழகத்தில் திமுக கூட்டணியின் வெற்றி இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. ஜெயலலிதா அவர்களின் மறைவுக்கு பின்னர் தமிழ்நாடு நரேந்திர மோடியின் அடிமை மாநிலமாக பாவிக்கப்பட்டு அதற்கு அதிமுகவின் சார்பில் இரண்டுபேர் அடிமைதலைவர்களாக நியமிக்கப்பட்டு தமிழக மக்கள் அனுபவித்து வந்த உரிமைகள் ஒவ்வொன்றாக இழந்து வந்த நிலை அனைத்து தரப்பினரையும் கோபமூட்டியது. மோடியின் அருளாசியினால் நம்முடைய ஆட்சிக்கு பயமில்லை என்ற காரணமே அதிமுக அமைச்சர்கள் மற்றும் அடிவருடிகள் ஊழல்கள் செய்ய தைரியம் அளித்தது. காவிரி நீர் பிரச்னையானாலும் அதில் உச்சநீதிமன்றமே தமிழகத்திற்கு நியாயம் வழங்கியபோதும் அந்த நியாயத்தையும் தட்டிப்பறித்த வேலையை நரேந்திரமோடி அரசும் அதை கைகட்டி வேடிக்கை பார்த்த எடப்பாடி அரசும் மக்களின் கோபத்திற்கு ஆளாகின. தேர்தலுக்காக நான்குமுறை தமிழகம் வந்த பிரதமர் நரேந்திரமோடி கஜா புயலினால் எட்டு மாவட்டங்கள் முற்றிலும் பாதிக்கப்பட்ட நிலையில் ஒருமுறை எட்டிப்பார்க்கக்கூட இதயமற்றவராக இருந்த நிலையில் நிவாரண உதவிகளும் குறைந்த அளவிலேயே செய்யப்பட்ட நிலையில் இரக்கமற்ற மத்திய அரசின் அரக்க குணம் தமிழக மக்களுக்கு தெளிவாக தெரிந்தது. தூத்துக்குடி துப்பாக்கி சூட்டுக்கு இரையானவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்லக்கூட வராத எடப்பாடி பழனிச்சாமி தமிழகத்தின் முதல்வரா அல்லது வேதாந்தா குழுமத்தின் முகவரா என்ற ஐயப்பாடு எழும் அளவிற்கு மக்களுக்கு அருவெறுப்பை ஊட்டின. தன் அரசில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு மட்டும் ஊதியமாற்ற நிலுவைகளையும் பணப்பயன்களையும் வழங்கிவிட்டு, அரசு

ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு அந்த சலுகைகளை அளிக்க முன்வராத நிலையில் அரசு ஊழியர்கள் நியாயமான ஒன்பது அம்ச கோரிக்கைகளுக்காக முன்னெடுத்த வேலை நிறுத்தப் போராட்டத்தை பொய்ப்பிரச்சாரங்கள் மூலமாக மக்களுக்கு எதிரான போராட்டமாக சித்தரித்து போராட்டத்தை திசைமாற்றிய முதல்வரையும் அமைச்சர்களையும் எந்த ஒரு அரசு ஊழியரும், ஆசிரியரும் மறந்திருக்கவில்லை என்பதைத்தான் இந்த தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது வாக்குகளால் மட்டுமல்ல, தங்கள் குடும்பத்தாரின் வாக்குகளால் மட்டுமல்ல, தங்கள் பகுதியில் உள்ள மக்களிடம் தொடர்ந்து பிரச்சாரம் செய்ததன் மூலமாகவும், தங்கள் உறவினர்களுக்கு மக்களுக்கு எதிரான ஆட்சியின் நிலையை எடுத்துக்கூறியதன் வாயிலாகவும் இந்த அரசுக்கு பலமான ஒரு எச்சரிக்கை மணியை அடிக்க விட்டிருக்கிறார்கள். இதற்காக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், இத்தேர்தலில் ஜனநாயகக் கடமையாற்றிய அனைத்து அரசு ஊழியர் மற்றும் ஆசிரியப் பெருமக்களின் பங்களிப்பை பெருமிதத்தோடு பாராட்டுகிறது.

### காத்துக்கிடக்கும் சவால்களும் கைக்கொள்ள வேண்டிய அணுகுமுறைகளும்!

தமிழகத்தில் நடந்த தேர்தலின் முடிவுகள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பெரும்பான்மை பொதுமக்கள் எதிர்பார்த்த முடிவுகளே என்றபோதிலும் அகில இந்திய அளவில் பாரதிய ஜனதா கட்சி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் நிலை தோன்றியுள்ளதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இதன் எதிரொலிப்பு பாஜக ஆட்சி கடந்த ஐந்தாண்டுகளில் மக்கள் மீது திணித்த வாழ்வாதார பிரச்சனைகள் தொடரும் என்பதை நமக்கு எச்சரிப்பதாகும். மதச்சார்பற்ற இந்திய நாட்டை கட்டிக் காப்பதில் நமக்கு மிகப்பெரிய சவால்கள் காத்துக்கிடக்கின்றன, தேர்தலில் வெற்றி பெற்று புதிய அமைச்சரவை பதவி ஏற்காத நிலையிலேயே இந்துத்துவா அமைப்பினர் முஸ்லிம்களின் மீது வன்முறைகளை ஏவத் துவங்கிவிட்ட நிலையில் மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசை பாகாப்பதிலும், மக்களின் உரிமைகளையும், குடிமைச் சுதந்திரங்களையும், வாழ்வாதாரங்களையும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் உரிமைகளையும் பாதுகாத்திட நாம் முன்பைவிட தீர்க்கமாகவும் தீவிரமாகவும் போராடக்கூடிய சூழல் எழுந்துள்ளது. கார்ப்பரேட்டுகளும் நம்முடைய உரிமைகளை இனி சுலபமாக நசுக்கி விடலாம் முனைப்பு காட்டி வரும் வேளையில் நம்முன் எழுந்துள்ள சவால்களை நாம் ஒன்றுபட்டு எதிர்கொள்ள வேண்டிய நேரமிது. குறிப்பாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களாகிய நாம் நம்முடைய உரிமைகளுக்காக மட்டுமல்லாமல் தமிழகத்தின் உரிமைகளுக்காகவும், மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கவும் மதச்சார்பற்ற தேசப்பற்று கொண்ட தோழமைகளையும், ஆளுமைகளையும் முன்னெடுக்க வேண்டிய நேரமிது. எனவே முன்பைவிட வலிமையாக, ஒற்றுமையாக, மிகக்கடுமையாக உரிமைகளுக்காக போராடத் தயாராவோம், நமக்கான உரிமைகளுக்காக மட்டுமல்லாமல் நாட்டுக்கான வளமைகளுக்காகவும்! ❖



*13.5.19 மாலை பெரணமல்லூரில் நடைபெற்ற மேதின பேரணிக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வட்டச் செயலாளர் க.பிரபு தலைமை தாங்கினார். பேரணி பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தொடங்கியது. அண்ணா சிலை முன்பு முடிவடைந்ததும் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க முன்னாள் மாநிலப் பொதுச் செயலாளர் பெரணமல்லூர் சேகரன், அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க வந்தவாசி வட்டச் செயலாளர் கே பால்ராஜ், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கலைஞர்கள் சங்க இணைச் செயலாளர் இரா.ராஜசேகரன், ஜாக்டோ ஜியோ சார்பில் பழனி, தமிழ்நாடு ஊரகவளர்ச்சி த்துறை அலுவலர்கள் சங்க மாவட்ட துணைத்தலைவர் நா.முத்துவேலன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட துணைத்தலைவர் ந.ராதாகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினர். கூட்டமைப்பின் சார்பில் குமார் நன்றி கூறினார்.* ❖



மறைந்த முன்னாள் மாநில செயலாளர் தோழர் ஏ.ராமசாமி அவர்களின் மறைவையொட்டி அன்றாரது புகைப்படத்திற்கு 24.05.2019 அன்று நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. ❖

# தண்டச் சம்பளம்!

சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள் என்றாலும் அவர்கள் தங்கள் பதவியி லிருக்கும் ஐந்து வருட காலத்திற்கு அரசாங்க ஊழியர்களாகவே பாவிக்கப்படுகிறார்கள். அவர் களுக்கு சம்பளம், ஓய்வூதியம் என்றெல்லாம் சிறப்பான முறையில் சலுகைகள் வழங்கப்பட் டுள்ளது. எம்.பி. ஒருவருக்கு ஊதியத்துடன் சேர்த்து உதவிக்கான அலுவலர்கள் மற்றும் இதர செலவு களுக்கான மொத்த தொகை மாதத்திற்கு ரூ.1,75,000 ஆகும். இதேபோல சட்டமன்ற உறுப்பினருக்கு சம்பளம் மற்றும் இதர செலவுகளுக்காக மாதம் ரூ.1,50,000 மக்கள் வரிப்பணம் செலவிடப்படுகிறது.

பொதுவாக மக்களவை அல்லது சட்டமன்றத் தேர்தல் எதுவாயினும் தேர்தல் அறிவிப்பு வந்த பின்னர் பொது மக்களுக்கான வளர்ச்சிப்பணிகள் , புதிய திட்டங்கள், அறிவிப்புகள் உள்ளிட்ட எதையும் மத்திய அரசோ மாநில அரசோ செய்ய முடியாது. இயற்கை பேரிடர் உதவிகள் மற்றும் வழக்கமான அகவிலைப்படி உயர்வுகள் போன்றவை மட்டும் தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்று வழங்க லாம். அதேபோல பிரதமரோ, முதல்வரோ தத்தமது அமைச்சரவையை வழக்கம்போல் கூடி ஆலோசனை நடத்த தடையில்லை. தேர்தல் அறிவிப்பு வெளியான பின் அமைச்சர்களும் எம்.பிக்களும், எம்.எல்.ஏக்களும் தேர்தல் பிரச்சாரத்தில் மட்டும் தீவிரம் காட்டு கின்றனர்.

உழைப்பைச் செலுத்தினால்தான் ஊதியம் என்று அரசு மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களுக்கு வகுக்கப்பட்டுள்ள சட்டம் இவர்களுக்கு மட்டும் பொருந்துவதில்லை. தேர்தல் விதிமுறைகள் அமலுக்கு வந்து தேர்தல்நடந்து முடிந்து முடிவுகள் வெளிவந்து புதிய ஆட்சி பதவி ஏற்கும் நாளுக்கு முன்னாள் வரை இவர்களுக்கு சம்பளம் கிடைக்கும். தேர்தல் அறிவிப்புக்குப் பின்னர் மக்களவை மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களின் பணிகள் முற்றிலு மாக முடக்கப்பட்டுவிடுகின்றன. நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலுக்கான அறிவிப்பு மார்ச் 10ம் தேதி தொடங்கி மே 23 வரை கிட்டத்தட்ட 75 நாட்கள் நாடாளுமன்ற செயல்பாடுகள் செயலிழக்கப்பட்ட நிலையில் பணி செய்யாமலேயே நாடாளுமன்ற உறுப்பினர்கள் 75 நாட்கள் ஊதியம் பெறுவது 'நோ ஒர்க் நோ பே' அதாவது 'வேலையில்லை சம்பள மில்லை' என்ற கோட்பாட்டுக்கு எதிரானது அல்லவா.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போன்றோர் தங்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக போராடி னாலோ வேலை நிறுத்தம் செய்தால் அரசாங்கம் சம்பளத்தைப் பிடித்துக் கொள்கிறது. ஆனால் தேர்தல் அறிவிப்புக்குப் பிறகு 75 நாட்கள் அதாவது 2½ மாத சம்பளத்தை எந்த வித உழைப்பையும் தராமல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊதியம் உள்ளிட்ட சலுகைகளை பெறுவது சட்டப்படி ஏற்புடையது தானா என்ற கேள்வி இப்போது அரசு ஊழியர்கள் மற்றும் தொழிலாளிகளிடையே பேசுபொருளாக மாறியுள்ளது.

அரசு ஊழியருக்கோ, ஆசிரியருக்கோ, தொழிலாள ருக்கோ சம்பளம் அகவிலைப்படி போன்ற சலுகை களில் உயர்வு கேட்டால் நிதி அமைச்சர் முதல் பணி மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை செயலாளர் வரை 20 ரூபாய் இன்க்ரிமெண்ட் கொடுத்தால் இத்தனை கோடி செலவாகிறது 40 ரூபாய் கொடுத்தால் அத்தனை கோடி ரூபாய் அரசுக்கு ஆண்டொன்றுக்கு செலவாகிறது என்று அவற்றை தடுக்கப்பார்க்கும் நிலையில் அறிக்கை விடுகிறார்கள். ஆனால் சுமார் 75 நாட்களுக்கு எந்த வேலையையும் பார்க்காமல் பொது மக்களின் வரிப்பணத்தை தண்டச் சம்பளமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெறுவது நியாய மானதுதானா?

நிர்வாகத்தில் அரசில் இதுகுறித்து தெளிவான விதிகள் இல்லை என்றபோதிலும் இத்தகைய காலங்களில் மக்களின் வரிப்பணத்தை கோடிக்கணக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தண்டமாக அழுவது என்பது ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கும் செயலா காதா? மத்திய மற்றும் மாநில அரசுகள் இதுகுறித்து உடனடியாக தெளிவான முடிவுகளை எடுக்க வேண்டும். அதற்கான விதிகளை வகுக்க வேண்டும்.

ஒரு அரசாங்கத்தில் பணியாற்றும் பொது ஊழியரோ, அரசு ஊழியரோ, வேறு ஒப்பந்த ஊழியர்களோ எந்தவித வேலையும் செய்யாமல் சம்பளம் மட்டும் வாங்குவது என்பதானது கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்த கதை போலானதாகும். தொழிலாள வர்க்கத்திற்கும் அரசு ஊழியர்களுக்கும் மட்டும் செலவிடும்போது மட்டும் மக்கள் வரிப்பணம் வீணடிக்கப்படக்கூடாது என்று வியாக்கியானம் பேசும் அதிகார வர்க்கமும் ஆட்சியாளர்களும் தங்களது சம்பளம் தங்களது சலுகைகளை பற்றி மட்டும் வாய் திறப்பது கிடையாது. எல்லோருக்குமான நீதி என்பது உங்களுக்கு ஒரு நிதி எங்களுக்கு ஒரு நீதி என்றானால் அதன்பேர் சம நீதியாக இருக்க முடியாது. சமூக அநீதியாகத்தான் இருக்க முடியும்.

- மனோஹரி

# அரசு மறைக்கும் கணக்கு?


இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நாடாளுமன்றத்தில் தலைமை கண மற்றும் தணிக்கை (சிஏஜி) அமைப்பு அரசிடம் ஒரு அறிக்கையைத் தாக்கல் செய்தது. அந்த அறிக்கையில் சிஏஜி குறிப்பிட்டுள்ள விவரங்கள் புதியதொரு அதிர்ச்சியை கொடுத்திருக்கிறது.

அரசின் செலவினங்களை உள்ளதை உள்ளபடி பட்ஜெட்டில் குறிப்பிட வேண்டும். அதன்மூலம் மட்டுமே இந்தியாவின் உண்மையான நிதிநிலை அறியப்படும். அதற்கேற்ப பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்க முடியும். ஆனால், நிதி பற்றாக்குறை இலக்கை மீறினால், நிதி பற்றாக்குறை அதிகமானால் பெரும் விமர்சனத்துக்குள்ளாக வேண்டிவரும் என்பதால், பட்ஜெட்டில் கணக்கிடப்படாத வகையில், அரசுத்துறை நிறுவனங்கள் மூலமாகவே கடனை வாங்கி பாஜக அரசு செலவினங்களைச் செய்துள்ளது.

அரசின் பல்வேறு மானிய திட்டங்களை அது சம்பந்தப் பட்ட அரசு துறை நிறுவனங்கள் மூலமாகவே கடனாகப் பெற்று செயல்படுத்தியுள்ளது. சிஏஜி சமர்ப்பித்துள்ள 2016 17 நிதியாண்டுக்கான நிதி பொறுப்புகள் மற்றும் பட்ஜெட் மேலாண்மை அறிக்கையில் இது விளக்கமாக குறிப்பிடப் பட்டுள்ளது. இதில் அரசு செலவினங்களில் உர மானியம் உணவுப் பொருள் மானியம், நீர்ப்பாசன திட்டம் உள்ளிட்ட செலவினங்களை பட்ஜெட் கணக்கில் வராதபடி, வங்கிக் கடன்கள், நபார்ட் வங்கிக் கடன்கள் மூலமாகவே செயல் படுத்தியுள்ளது. ரயில்வே செலவினங்களும் ரயில்வே பைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக கடனில் செயல் படுத்தப்பட்டுள்ளது. இந்த செலவினங்கள் எதுவுமே பட்ஜெட் கணக்கில் சேர்க்கப்படவில்லை.

உதாரணத்துக்கு 2016 17 நிதியாண்டில் உணவுப் பொருள்களுக்கான மானிய செலவு ரூ.78,335 கோடி என கணக்கில் காட்டப்பட்டுள்ளது. ஆனால், ரூ.81,303 கோடி அடுத்த ஆண்டு கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது. அதே போல், உர மானியத்துக்கு ரூ.70,100 கோடி செலவு என காட்டப்பட்டுள்ளது. இதில் ரூ.39,057 கோடி அடுத்த ஆண்டு கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் பல ஆயிரம் கோடி கடனாக அரசுத் துறை நிறுவனங்களுக்குத் தொக்கி நிற்கிறது. ஒருவேளை இந்தக் கடனை அரசுத்துறை நிறுவனங்கள் சமாளிக்க முடியாத சூழல் ஏற்படும்போது, அது திவால் ஆக வாய்ப்புள்ளது. இந்தப் போக்கு ஆபத்தானது என சிஏஜி தனது அறிக்கையில் குறிப்பிட் டுள்ளது.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தையும் மறுத்துள்ள மத்திய அரசு, பட்ஜெட்டுக்கு வெளியே உள்ள




செலவினங்களை, கடன்களைக் கையாள்வதற்கு சட்ட ரீதியான விதிமுறைகள் எதுவும் இல்லையென்று சொல்வதை ஏற்க முடியாது என்று கூறியுள்ளது. அதற்கான சட்டதிருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன என்று பதிலளித் துள்ளது. அரசின் நிதி பற்றாக்குறை மற்றும் கடன்களை மேலாண்மை செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் சட்டமுறைகளும் உள்ளன. அதன்படி செயல்பட்டு, நிதிப் பற்றாக்குறை மற்றும் கடன்களை மேலாண்மை செய்வதற் கான அனைத்து நடவடிக்கைகளும் சட்டமுறைகளும் உள்ளன. அதன்படி செயல்பட்டு, நிதிப் பற்றாகக்குறை இலக்கு 2020க்கள் ஜிடிபியில் 3 சதவீதமாக இருக்கும்படி கொண்டு வரப்படும் என தெரிவித்துள்ளது.

அரசு என்னதான் சமாதானம் சொன்னாலும், சிஏஜி இந்த விஷயத்தில் கறாராகத் தனது விமர்சனத்தை முன்வைத்துள்ளது. இப்படி அரசு செலவினங்களில் வெளிப்படைத் தன்மை இல்லாதது முறையல்ல என்றும், இதன்மூலம் உண்மையான செலவினங்கள் மறைக்கப்பட்டு, நிதி பற்றாக்குறை குறைவாக இருப்பதுபோல் காட்டப்படுகிறது என்றும் கூறியுள்ளது. இந்தப் போக்கு நீண்ட காலத்தில் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் எச்சரித் துள்ளது. அரசு தன்னுடைய பட்ஜெட்டுக்கு வெளியிலான செலவினங்களின் காரணங்களையும், நோக்கங்களையும் தெரிவிக்க வேண்டும். அதேசமயம், இப்படி பட்ஜெட்டுக்கு வெளியே அரசு செய்துள்ள செலவினங்களின் விவரங் களை ஒன்றுவிடாமல் தெரிவிக்க வேண்டும். இதனை பட்ஜெட்டிலும் விளக்கமாகக் குறிப்பிட வேண்டும் என்றும் கூறியுள்ளது.

நாட்டின் நிதி நலனுக்காக எந்த முடிவுகளையும் அரசு சட்ட ரீதியாக எடுக்கலாம். ஆனால், அதை வெளிப்படை யாகச் செய்ய வேண்டும். சட்டத்தில் உள்ள சாதகங்களைப் பயன்படுத்தி மறைமுகமாக செய்ய வேண்டிய அவசிய மில்லை. வெளிப்படையாக இருப்பதன் மூலம் மட்டுமே மக்களின் நன்மதிப்பை அரசு பெற முடியும் என்பதை உணர வேண்டும்.

நன்றி **தி இந்து தமிழ்**

# பாட்டாளிகளின் போராளி



வி.பி.சிந்தன்

அன்று சென்னை ராஜதானியில் இருந்த மலபார் மாவட்டம், இலையாவூர் கிராமத்தில் செரியம்மா சாந்துநாயர் தம்பதிக்கு 1918 அக்டோபர் 10 அன்று மூன்றாவது புதல்வராகப் பிறந்தவர் சிந்தன். அவரது அண்ணனும் அண்ணியும் காங்கிரசில் இணைந்து விடுதலைப் போராட்டத்தில் தீவிரப் பணியாற்றியவர்கள். அதைக் காட்டிலும் தனது அக்கா தேவகியின் தீவிர அரசியல் செயல்பாடும் ஆழ்ந்த அரசியல் புலமையுமே தான் அரசியலுக்கு வர ஆதர்சமாக இருந்தது என்று சொல்வார் சிந்தன்.

காந்தியின் அறைகூவலை ஏற்று கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றதிலிருந்துதான் சிந்தனின் அரசியல் தொடங்கியது. ஹரிஜன சேவா இயக்கத்தில் அக்காவுடன் சேர்த்து உழைத்து வந்தவர் அந்தப் பகுதிக்கு காந்தி வந்தபோது அவரிடம் ஆட்டோகிராப் கேட்டிருக்கிறார். காந்தியோ பதிலுக்கு சிந்தனிடம் போராட்ட நிதி தருமாறு கோருகிறார். சிந்தனின் அக்கா தன்னுடைய இரு கைகளிலும் உள்ள வளையல்களைக் கழற்ற, சிந்தன் தன்னுடைய கைக்கடிகாரத்தையும் கழற்றி, தங்கள் பங்களிப்பாக காந்தியிடம் வழங்கினார்கள்.

## கம்யூனிஸ்டாக மாறிய காந்தியர்

1934ல் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டபோது மலபார் பகுதியில் இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு, கிருஷ்ணப்பிள்ளை, ஏ.கே.கோபாலன் போன்ற தலைவர்களுடன் சேர்ந்து அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டார். அவர் பங்கெடுத்த இயக்கங்களின் பெயர்கள் வெவ்வேறாக இருப்பினும், சமத்துவத்துக்கான தேடலே அவருடைய அரசியலாக இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியே பிற்பாடு அவருக்கான காலமாக அமைந்தது.

தோழர் வி.பி.சி. ஏராளமான அடக்குமுறைகளைச் சந்தித்திருக்கிறார். 1939லேயே ஏகாதிபத்திய யுத்தத்தை எதிர்த்துப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் என்ற காரணத்திற்காக இரண்டு ஆண்டுகள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு சிறைக் கைதிகளின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பியதால், சிறையில் கடும் தடியடித் தாக்குதலுக்கு உள்ளாகி மண்டை உடைந்தது. 1942ல் விடுதலையான பிறகு கட்சிப் பணியாற்றுவதற்காகத் தமிழகம் வந்தார். சிறிது காலம் சென்னையில் கட்சிப் பணியாற்றியவர் பின்னர் ராமநாதபுரம், திருநெல்வேலி என்று தென் மாவட்டங்களில் தொடங்கி மாநிலத்தின் கிராமங்கள்தோறும் அலைந்து கட்சிப் பணியாற்றினார். சென்னை வந்த அவர் மீண்டும் தொழிற்சங்கப் போராட்டங்களில் கைதாகி சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

1948ல் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் தடை செய்யப்பட்ட பின்னணியில் மூன்று ஆண்டுகள் மீண்டும் சிறை வாழ்க்கை, சிறையில் பலமுறை மிகக் கொடூரத் தாக்குதலுக்கு உள்ளானார். புதுவையில் வீரம் செறிந்த விடுதலைப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டபோதுதான், பாரதிதாசன் உடன் ஏற்பட்ட நட்பு அவர் பெயர் மாற்றத்துக்குக் காரணமானது. சிண்டன் என்ற மலையாளப் பெயரை பாரதிதாசன் சிந்தன் என்று மாற்றினார். சிந்தன் என்றால் ஞானி என்று பொருள்.

## தொழிலாளர்களின் பெருந்தலைவர்

போராட்டத்திலேயே 24 மணி நேரமும் கழித்ததால் நாற்பதாவது வயதில்தான் சிந்தனுக்குத் திருமணம் நடந்தது. சாரதா என்ற சங்கீத ஆசிரியைத் திருமணம் செய்து கொண்டார். 1962ல் இந்தியசீன மோதலைத் தொடர்ந்து வி.பி.சிந்தன் மீண்டும் கைதானார். 1966ல் போக்குவரத்து தொழிலாளர் சங்கத்தை சென்னையில் தொடங்கிட அயராது பாடுபட்டார். பல்வேறு தொழிற்சங்க போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி சென்னை தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவராக உருவெடுத்தார்.

1975ல் நெருகடி நிலை காலகட்டத்தில் வி.பி.சிந்தன் மீண்டும் தலைமறைவானார். நாட்டில் ஜனநாயகம் மீண்டும் மலர்ந்தபோது இடைவிடாத போராட்டங்களில் ஈடுபடலானார். 1987ல் மாஸ்கோவில் நடைபெற்ற மே தின விழா அணிவகுப்பைப் பார்வையிடச் சென்றார் சிந்தன். மே 8 அன்று ஸ்டாலின்கிராடில் யுத்த வீரர்களின் நினைவிடத்தைக் காணச் சென்றபோது மாரடைப்பால் காலமானார்.

சிந்தனின் வாழ்வை ஒரு வரியில் சொல்ல வேண்டும் என்றால், பாட்டாளிகளுக்காகவே வாழ்ந்து மறைந்த போராளி என்று சொல்லலாம். தமிழ்நாடு மறக்க முடியாத, மறக்கக் கூடாத தலைவர்களில் ஒருவர் அவர். தோழரின் நூற்றாண்டு நிறைவு நாளை போற்றுவோம். ❖

# வருங்கால வைப்பு நிதிக்கு 8.55 சதவீதத்திற்கு மேல் வட்டி தர முடியாதாம் தொழிலாளர்களை வஞ்சிக்கும் மோடி அரசு

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கு 2018-19ஆம் ஆண்டில் 8.65 சதவீத வட்டி வழங்கலாம் என்று ஊழியர் சேமநல நிதியத்தின் டிரஸ்டீக்கள் பரிந்துரை செய்ததாகவும், மத்திய அரசு அதனை ஏற்காமல், 8.55 சதவீதம் மட்டும் வட்டி வழங்க அநீதி இழைத்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த 8.,55 சதவீதம் வட்டி என்பது கடந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகமிகக் குறைவானது என்றும் கூறப்படுகிறது.

தொழிலாளர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு ஊழியர் சேமநல நிதியத்தின் டிரஸ்டிக்கள், வட்டியை உயர்த்த முன்வந்தாலும், நிதியமைச்சகம் ஒரு கணக்கை வைத்துக்கொண்டு, அனுமதி மறுக்கிறது என்று தொழிலாளர் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதாவது ஊழியர் சேமநல நிதியத்தில் இருக்கும் பணத்தில் 2018-19ஆம் ஆண்டுக்கு பி.எப்.கணக்குதாரர்களுக்குக் கடந்த வருடம் போல 8.55 சதவிகிதம் மட்டுமே வட்டி கொடுத்தால் உபரி 771 கோடியே 37 லட்சம் ரூபாயாக இருக்கும். ஒருவேளை டிரஸ்டிகள் சொல்வது போல 8.65 சதவிகிதமாக வட்டியை உயர்த்தினால் உபரி நிதி 151 கோடியே 67 லட்சம் ரூபாய்க்கு சரிந்து விடும். இதுவே 8.7 சதவிகிதம் கொடுத்தால், சேமநல நிதியமானது 158 கோடி ரூபாய் தன் கைகாசைப் போட வேண்டி இருக்குமாம்.

எனவே, மத்திய தொழிலாளர் நல அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஊழியர் சேமநல நிதி அமைப்பிடம் பிஎப் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ஆண்டுக்கு 8.65 சதவீதம் வட்டி கொடுக்கும் அளவுக்குப் பணம் இருக்கிறதா? என ரொம்ப நல்லவர்கள் போல மத்திய நிதி அமைச்சகம் கேள்வி எழுப்பி இருக்கிறது.

இதற்கு ஊழியர் சேமநல நிதி அமைப்பிடம் பதில் இருந்தாலும், அதை விவாதித்தால் பழி தொழிலாளர் நல அமைச்சகத்தின் மீதுதான் விழும் என்ற அடிப்படையில் அவர்கள் மென்று விழுங்கியுள்ளனர். ஏனெனில், சேமநல நிதியத்தின் பணம் சுமார் 575 கோடி ரூபாயை தொழிலாளர் நல அமைச்சகமானது, திவாலான ஐஎல் அண்ட் எப்எஸ் நிறுவனத்தில் முதலீடு செய்திருப்பதாக கூறப்படுகிறது. இவ்வாறு முதலீடு செய்ததற்கு அடிப்படையில் மத்திய அரசின் கொள்கைகள்தான் காரணம் என்றாலும், அதை மூடி மறைத்து பழியை தொழிலாளர் துறை மீது தள்ளிவிட்டு, தப்பித்துக் கொள்ளவே மத்திய அரசு கணக்கு கேட்டுள்ளது.

இருப்பினும், நிதியமைச்சக அதிகாரிகளோடு, தொழிலாளர் நல அமைச்சக அதிகாரிகள் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள். பல கடிதங்களில் பதிலும் அளித்ததாக கூறப்படுகிறது. ஆண்டுக்கு 8.65 சதவீதம் வட்டியை கொடுக்க முடியும் என்று வாதிட்டிருக்கிறார்கள். ஆனால், கடைசி வரை நிதியமைச்சகம் ஒப்புதல் அளிக்கவில்லை.

பிஎப் சந்தாதாரர்களுக்குக் கடநத் 20 வருடங்களுக்கு மேல் வட்டியைக் கணக்கட்டுக் கொடுத்து வருகிறோம். இதுவரை எங்கள் கணிப்புகள் தப்பியதில்லை. இப்போதும் மத்திய நிதியமைச்சகம் சில கேள்விகளை எழுப்பியிருக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு விளக்கமளித்து வருகிறோம் என்று தொழிலாளர் துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த 2016ஆம் ஆண்டில் 8.80 சதவீதம் வரை வட்டி கொடுப்பதற்கு பிஎப் டிரஸ்டீக்கள் பரிந்துரைத்தார்கள். ஆனால் மத்திய நிதியமைச்சகம் 8.70 சதவீதம் மட்டுமே கொடுக்க அனுமதித்தது. இதுபற்றி கேள்வி எழும்போதெல்லாம் மத்திய அரசு நிதி நெருக்கடியில் இருக்கிறது, கைக்காசை போட்டு பிஎப் பணத்திற்கு வட்டி தர முடியாது என்று கூறுவது வழக்கமாகிவிட்டதாக கூறப்படுகிறது.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கு 8.7 சதவிகிதம் வட்டி கொடுத்தாலும், மத்திய அரசுக்கான கூடுதல் செலவு வெறும் 158 கோடி ரூபாய்தான். அந்த ரூ.158 கோடியை நாங்கள் தர முடியாது என்று கூறி பிடிவாதம் பிடித்து வருகிறது. அதே மத்திய அரசுதான் ரூ. 2,989 கோடிக்கு படேலுக்கும், ரூ.3,643 கோடிக்கு சத்ரபதி சிவாஜிக்கு சிலை வைப்பதற்கு நிதியை வாரி இறைத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ❖

# சட்டங்கள் குறித்த சில தகவல்கள்...

## பெண் தொழிலாளர்களின் சட்ட உரிமைகள்

ஒவ்வொரு பெண்ணும் உழைப்பாளிதான். வீட்டிலே அல்லது வெளியிலோ கடுமையாக உழைக்கிறார்கள். அவர்களுக்கென சில அடிப்படை உரிமைகளை சட்டம் வழங்கி உள்ளது என்பதை உழைக்கும் பெண்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். உழைக்கும் பெண்கள் தெரிந்து கொள்வதற்காக மூன்று சட்டங்களின் தொகுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

1. குறைந்தபட்ச ஊதிய சட்டம்

2. சம வேலைக்கு சம ஊதிய சட்டம்

3. தொழிற்சாலை சட்டம்

1. ஒவ்வொரு பெண் உழைப்பாளிக்கும் சம்பவம் வேண்டும். ஏனென்றால் உழைப்பவர் யாராயிருந்தாலும் அவரது உழைப்புக்கேற்ற கூலி கொடுத்தாக வேண்டும்.

2. உழைப்பவர் ஒவ்வொருவருக்கும் அரசாங்கம் நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச கூலிக்குக் குறையாமல் ஊதியம் கொடுத்தாக வேண்டும்.

3. ஒரே மாதிரியான அல்லது சமமான வேலைக்கு ஆண்களுக்கு உரியதைப் போலவே பெண்களுக்கும் ஒரே மாதிரியான ஊதியம் வழங்கப்பட வேண்டும்

4. பெண் உழைப்பாளிக்கு அவர்களுடைய பேறு காலத்தின்போதும், பேறு காலத்திற்குப் பின்னரும், கருக்கலைவு ஏற்பட்டால் அதற்குப் பின்னரும் என சில சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

## குறைந்தபட்ச ஊதிய சட்டங்கள் (Minimum Wages Act, 1948)

குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948 என்பது ஒரு தனிச் சட்டம். அரசாங்கம் நிர்ணயித்துள்ளதற்குக் குறையாத தொகையைச் சம்பளமாக கொடுத்தாக வேண்டும் என இச்சட்டம் விதிக்கிறது. ஒவ்வொருவரும் செய்யும் வேலைக்கு ஏற்ப இந்தச் சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது.

1. கல் உடைப்பது அல்லது சாலை போடுவது போன்ற வேலைகளில் தற்காலிக அடிப்படையில் பணி செய்பவர்கள்

2. பீடித் தொழில் அல்லது கைத்தறித் தொழில் போன்றவற்றில் உற்பத்தி பொருளுக்கு ஏற்ற விகிதத்தில் கூலி பெறும் உழைப்பாளிகள்.

3. சுரங்கங்கள் அல்லது கட்டுமான இடங்கள் போன்றவற்றில் நாள் கூலி அடிப்படையில் வேலை செய்பவர்கள்.

4. ஒப்பந்தக்காரர்களிடம் வேலை செய்பவர்கள்.

5. தோட்டங்கள் அல்லது தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள்

6. விவசாயத் துறையில் விதை விதைத்தல் அல்லது கதிர் அறுத்தல் போன்ற வேலை செய்பவர்கள்

மேலே கூறப்பட்டுள்ளவர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் கொடுத்தாக வேண்டும்.

ஒருவர் குறைந்தபட்சக் கூலியை விடக் குறைவானதொரு சம்பளத்துக்கு வேலை செய்ய ஒப்புதல் அளித்திருந்தால்கூட அவருக்கு வேலையளித்தவர் குறைந்தபட்சக் கூலியும் கொடுத்தேயாகக் கடமைப்பட்டுள்ளார்.

ஒவ்வொருவரும் தாங்கள் செய்யும் வேலைக்குரிய சம்பளத்தைப் பெற உரிமை உண்டு. வயது வாரியாக பல்வேறு சம்பளங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1. குழந்தைகள் அதாவது 14 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள்

2. இளையவர்கள் அதாவது 14 வயதிற்கு மேல் 18 வயதிற்கு உட்பட்டவர்கள்

3. பெரியவர்கள் அதாவது 18 வயதிற்கு மேற்பட்டவர்கள்

### சம்பளம் வழங்கப்படும் முறை

ஒருவருடைய சம்பளத்தை ரொக்கப் பணமாக வாங்கிக் கொள்ள உரிமை உள்ளது. அவருடைய சம்பளத்தை ரொக்கப் பணமாக கொடுக்கும்படி கேட்டு வாங்கிக் கொள்ளலாம்.

வேலைக்கு அமர்த்தியவர் ரொக்கப் பணமாகச் சம்பளத்தைத் தருவதற்குப் பதிலாக வேறு ஏதாவது பொருளைப் பெற்றுக் கொள்ளும்படி தொழிலாளியை கட்டாயப்படுத்த முடியாது.

விவசாயத்தைப் பொறுத்தவரையில் சம்பளத்தில் ஒரு பகுதியை ரொக்கமாகவும், மறுபகுதியை உணவு தானியம் போன்ற பொருளாகவும் கொடுக்கலாம்.

ஆயிரம் வேலையாட்களுக்கு மேல் இருந்தால், ஒவ்வொரு மாதமும் வேலையின் ஏழாவது நாளன்று சம்பளம் பட்டுவாடா செய்யப்பட வேண்டும்.

மற்ற எல்லா சூழ்நிலைகளிலும் மாதத்தின் 10ஆம் நாளன்று சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

## சம்பள பிடித்தங்கள்

ஒருவருடைய சம்பளத்தில் விருப்பப்படி எல்லாம் எவரும் பிடித்தம் செய்ய உரிமை யில்லை. பிடித்தம் செய்யவும் சில சட்ட விதிமுறைகள் உள்ளன. உதாரணமாக ஒருவரின் அலட்சியத்தால் அவரை வேலையில் அமர்த்தியவருக்கு இழப்பை உண்டாக்கினால் சம்பளப் பிடித்தம் செய்யப்படலாம். ஆனால், அதை செய்வதற்கு அவரைக் கூப்பிட்டு போதிய விளக்கங்கள் கூற அனுமதிக்க வேண்டும்.

பல்வேறு வகையான வேலைகளுக்குப் பல்வேறு வகையான சம்பளங்கள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன. ஒருவருடைய வேலைக்கு உரிய குறைந்தபட்ச சம்பளம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அருகில் உள்ள தொழிலாளர் துறை அலுவலகத்தில் விசாரிக்க வேண்டும்.

ஒரு சாதாரண வேலை நாளில் இத்தனை மணி நேர வேலைதான் என்பது நிர்ணயிக்கப்பட் டுள்ளது. வேலைக்கு அமர்த்தியவர் ஒரு நாளில் 8 மணி நேர வேலைக்கு மேல் ஒருவரை வேலை செய்யும்படி வற்புறுத்த முடியாது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு மேல் ஒருவர் வேலை பார்க்க நேர்ந்தால் அதற்காகக் கூடுதல் பணம் தர வேண்டும். ஒருவருடைய கூடுதல் வேலை நேரத்திற்கு ஏற்ப அவருக்கு இரட்டிப்பு சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். ஒருவர் வேலைக்கு போயிருந்த போதிலும் அவரை வேலைக்கமர்த்தியவர் முழு நேரமும் வேலை தராவிட்டாலும்கூட அவருடைய சம்பளத்தில் ஏதும் குறைவு இல்லாமல் ஒரு நாளுக்குரிய சம்பளத் தொகை முழுவதையும் அவருக்கு தந்தாக வேண்டும்.

## ஓய்வு அல்லது விடுமுறை

வாரத்தில் ஒரு நாள் சம்பளத்துடன் கூடிய விடுமுறையும் ஓய்வும் பெற ஒவ்வொரு தொழிலாளிக்கும் உரிமை உண்டு.

## சம வேலைக்கு சம ஊதியம்

சம ஊதிய சட்டம் 1976 என்று ஒரு சட்டம் இருக்கிறது. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒரே விதமான வேலையைச் செய்தால், அவர்களுக்குச் சம ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்தச் சட்டம் சொல்கிறது. இந்தச் சட்டத்தின்படி ஆண்களைவிட பெண்களுக்குக் குறைவான சம்பளம் கொடுக்கக் கூடாது.

ஒரே வேலை அல்லது ஒரே மாதிரியான வேலை என்றால், எல்லா வகைகளிலும் ஒரே மாதிரியுள்ள வேலை மட்டும்தான் என்று அர்த்தம் அல்ல. பொதுவாக ஒரே பாணியில் உள்ள அல்லது ஒரே மாதிரியான தன்மைகள் கொண்ட இரு வேலைகளும் சம வேலைகள் ஆகும்.

உதாரணமாக ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பண்ணையில் நாற்று நடும் வேலையில் அமர்த்தப்பட்டார்கள். பண்ணையார் ஆணுக்கு ரூ.10 தினக்கூலியும், பெண்ணுக்கு ரூ.6 தினக்கூலியும் கொடுத்தா இதேபோல எல்லா பெண்ணுகளும் ஆண்களைப் போலவே ஒரே வேலை செய்தபோதும் கூட பண்ணையார் பெண்களுக்கு, ஆண்களைவிடக் குறைவான சம்பளமே கொடுத்தார்.

இது சட்டத்துக்கு எதிரானது. இருவருக்கும் சம ஊதியம் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு அந்தப் பெண்ணுக்கு குறைவான கூலி கொடுத்த குற்றத்திற்காகப் பண்ணையாருக்கு சிறைத் தண்டனை வழங்குவதோடு அபராதமும் விதிக்கலாம்.

ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பண்ணையார் வயலில் நெல் அறுவடை செய்யும் வேலையில் அமர்த்தப்பட்டார்கள். ஆணுக்கு கட்டுகளை கதிரடிக்கும் இயந்திரத்தில் நெற்கதிர்களை இடும் வேலையும் பெண்ணுக்கு இயந்திரத்தின் இருந்து வெளிவரும் நெல் தானியத்தைச் சாக்குகளில் சேகரிக்கும் வேலையும் கொடுக்கப்பட்டது.

பண்ணையார் ஆணுக்கு ரூ.10-ம், பெண்ணுக்கு ரூ.5-ம் கூலியாகக் கொடுத்தார். இது தவறாகும். இந்த இரண்டிலும் ஏறக்குறைய ஒரே மாதிரியான பலமும் திறமையும் சம்பந்தப்பட்டிருக்கிறது. பண்ணையார் இவ்வாறு பெண்ணுக்கு குறைந்த கூலி கொடுத்ததற்காகச் சிறைத் தண்டனையும், அபராதமும் வழங்கப்படலாம்.

அனைவரும் ஒன்றுசேர்ந்து சம வேலைக்கு சம ஊதியம் வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும்.

வேலைக்கு அமர்த்துபவர் எவரும் வேலை நியமனம், சம்பளம், பதவி உயர்வு, பயிற்சி, வாய்ப்பு அல்லது மாற்றல் போன்ற எதிலும் பெண்களுக்கு பாரபட்சம் காட்டக்கூடாது. வேலையில் அமர்த்துபவர் பெண் என்ற ஒரே காரணத்துக்காக மட்டுமே அவருக்கு வேலை தர மறுத்தால் அவர் தண்டனைக்குள்ளாவார்.

உதாரணமாக கட்டிடம் கட்டும் கொத்தனார் வேலைக்கு ஆண்களை மட்டும் அமர்த்துவதும் வேலை தெரிந்திருந்தும் பெண் என்பதற்காக மறுக்கப்பட்டு செங்கல்லும் பூச்சுக்கலவையும் எடுத்துக் கொடுக்கும் சிற்றாள் வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி குற்றம். பெண்கள் புகார் கொடுத்தால் ஒப்பந்தக்காரருக்கு அபராதம் விதிக்கப்படும். அவர் சிறைவாசமும் இருக்க நேரிடும்.

## தொழிற்சாலை சட்டங்கள்
## (Factories Act, 1948)

தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் உரிமைகள்

தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களுக்கு சில சிறப்பு சலுகைகளை சட்டம் விதிக்கிறது. அவை

பெண்களுக்கென தனியாகக் கழிப்பறைகளும், கழிவு அறைகளும் வேண்டும். அவைகளுக்குக் கதவுகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு தொழிற்சாலையில் 30 பெண் தொழிலாளர்களுக்கு மேற்பட்டவர்கள் வேலை செய்தால் அவர்களுடைய குழந்தைகளைப் பாதுகாக்க குழந்தைகள் காப்பகங்கள் அமைக்கப்பட வேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட சுமைக்கு மேற்பட்ட எதையும் தூக்கும் வேலையில் பெண்களை ஈடுபடுத்தக் கூடாது.

இயங்கிக் கொண்டிருக்கும் எந்தவொரு கருவியையும் சுத்தம் செய்யவோ அல்லது அவற்றுக்கு எண்ணெய் விடவோ பெண்களை ஈடுபடுத்தக் கூடாது.

வாரத்தில் 48 மணி நேரத்திற்கு மேல் பெண்களை வேலையில் ஈடுபடுத்தக் கூடாது.

பெண்களுக்கு வாரத்தில் ஒரு நாள் விடுப்பு தர வேண்டும்.

இடைவெளி இல்லாமல் தொடர்ந்து 5 மணி நேரத்திற்கு மேல் பெண்களை வேலையில் ஈடுபடுத்தக் கூடாது.

காலையில் 6 மணியில் இருந்து மாலையில் 7 மணி வரையிலான காலத்துக்குள்தான் பெண்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ❖




TNGEA தஞ்சை மாவட்ட தலைவர் எஸ்.கோவிந்தராசு அவர்களது பணி ஓய்வு பாராட்டு விழா 11.5.19 அன்று தஞ்சாவூர் பனகல் லாட்ஜில் நடைபெற்றது.

# தமிழகம் முழுவதும் நடைபெற்ற 36வது அமைப்பு தின விழா

## தருமபுரி

மாவட்ட ஆட்சியரகம் அருகே நடைபெற்ற 36-வது அமைப்பு தின கொடியேற்று நிகழ்ச்சிக்கு மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமையேற்றார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாவட்ட செயலாளர் ஏ.சேகரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியை மாவட்ட துணைத் தலைவர் எம்.யோகராசும் ஏற்றி வைத்தனர். இதில் கூட்டுறவுத் துறை ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ஜி.பழனியம்மாள், சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் சி.காவேரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி அவர்கள் நன்றி கூறினார்.

நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு நடைபெற்ற 36-வது அமைப்பு தின நிகழ்ச்சிக்கு வட்ட செயலாளர் கே.பிரபாகரன் அவர்கள் தலைமை ஏற்றார். மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் அவர்கள் கொடியேற்றினார். மாவட்ட செயலாளர் ஏ.சேகர்,சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் சி.காவேரி மாலைமுத்து உள்ளிட்டோர் பங்கேற்றனர். முடிவில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் மகேஸ்வரி நன்றி கூறினார்.

## கரூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 36வது அமைப்பு தினக் கொண்டாட்டம் மாவட்டத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. சங்கப் பதாகையினை மாவட்டத்தில் 6 இடங்களில் ஏற்றி வைக்கப்பட்டு ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

மாவட்ட மையத்தின் சார்பில் சங்கக் கட்டிடத்தில் சங்கத்தின் பதாகையினை மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் ஏற்றி வைத்தார். இதில் மாவட்ட நிர்வாகிகள் கே.சக்திவேல், பொன்.ஜெயராம், ஆர்.தாமோதரன், வட்டக்கிளை நிர்வாகிகள் கோ.லட்சுமணன், எல்.பாலசுப்பிரமணி, ஆர்.செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கரூர்-1 வட்டக் கிளை சார்பில் வணிக வரித்துறை அலுவலக வளாகத்தில் அமைப்பு தினம் கொண்டாடப்பட்டது. வணிக வரிப் பணியாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் சித்திக் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் கே.சக்திவேல் சங்கப் பதாகையினை ஏற்றி வைத்தார். மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் விளக்கவுரை ஆற்றினார். வட்டச் செயலாளர் எல்.பாலசுப்பிரமணி நன்றி கூறினார். மாவட்ட, வட்ட நிர்வாகிகள், வணிக வரித் துறை பணியாளர்கள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அதேபோல் கரூர், தாலுக்கா அலுவலகம் முன்பு நடைபெற்ற அமைப்பு தினக் கொண்டாட்டத்தில் சங்கப் பதாகையினை மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.தாமோதரன் ஏற்றி வைத்தார். மாவட்ட, வட்ட நிர்வாகிகள், அரசு ஊழியர்கள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கரூர்-2 வட்டக் கிளை சார்பில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் அமைப்பு தினம் கொண்டாடப்பட்டது. சங்கத்தின் வட்டத் தலைவர் கோ.லட்சுமணன் தலைமை தாங்கினார். மாவட்டப் பொருளாளர் பொன்.ஜெயராம் சங்கப் பதாகையினை ஏற்றி வைத்தார். மாவட்டச் செயலாளர் கே.சக்திவேல் விளக்கவுரை ஆற்றினார். வட்டச் செயலாளர் என்.செல்வம் நன்றி கூறினார். மாவட்ட, வட்ட நிர்வாகிகள், வளர்ச்சித் துறை பணியாளர்கள் உட்பட 30க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணராயபுரம் வட்டக் கிளை சார்பில் அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் அமைப்பு தினம் கொண்டாடப்பட்டது. சங்கத்தின் மாவட்ட மகளிர் அமைப்பாளர் கே.செல்வராணி தலைமை தாங்கி சங்கக் கொடியினை ஏற்றி வைத்தார். வட்டச் செயலாளர் பழனிச்சாமி விளக்கவுரையாற்றினார். வட்டப் பொருளாளர் முருகேசன் நன்றி கூறினார். மாவட்ட, வட்டக் கிளை நிர்வாகிகள் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் 30க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கடவூர் வட்டக்கிளை சார்பில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் அமைப்பு தினம் கொண்டாடப்பட்டது. சங்கத்தின் வட்டத் தலைவர் ஸ்ரீரங்கன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் சங்கப் பதாகையினை ஏற்றி வைத்தார். வட்டச் செயலார்

பிரேம் விளக்கவுரை ஆற்றினார். வட்டப் பொருளாளர் நன்றி கூறினார். மாவட்ட, வட்ட நிர்வாகிகள், வணிக வரித் துறை பணியாளர்கள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

க.பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி வட்டக் கிளையில் சட்டமன்ற இடைத்தேர்தல் காரணமாக கொடியேற்று நிகழ்ச்சி நடைபெறவில்லை. அனைத்து அலுவலகங்களுக்கும் வட்டக் கிளை நிர்வாகிகள் சென்று ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் இனிப்புகள் வழங்கி சங்க அமைப்பு தினத்தினை கொண்டாடினர்.

## கிருஷ்ணகிரி

மாவட்டத்தில் அரசு ஊழியர் சங்கத்தின் 36வது அமைப்பு தினத்தையொட்டி, ஓசூர் பட்டு வளாகம் முன்பு 4-5-19 அன்று அமைப்பு தின கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட தலைவர் பி.சந்திரன் தலைமையில் சங்கக் கொடியை மாநில தலைவர் எம்.சுப்பிரமணியனும், சம்மேளனக் கொடியை பொதுச் செயலாளர் மு.அன்பரசு, பட்டு வளர்ச்சித் துறை சங்க கொடியை மாநில பொருளாளர் தோழர் ஆர்.நடராஜன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

6-5-19 அன்று மாவட்டம் முழுவதும் 9 இடங்களில் 5 வட்டங்களில் கொடியேற்ற நிகழ்ச்சி நடைபெற்றது. வட்ட நிர்வாகிகள் ஜி.வெங்கடேசன், எஸ்.சின்னப்பன், ஜெகதாம்பிகா, ஏ.மணி, எஸ்.பசப்பா, வி.தேவன், எம்.திம்மராஜ், தமிழ்ச்செல்வன், எஸ்.கே.தனலட்சுமி, கே.கனகவள்ளி கிருஷ்ணன், சுப்பிரமணியன், சுரேஷ்குமார் ஆகியோர் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் ஆர்.நடராஜன், வி.தேவராஜ் கே.தேன்மொழி ஆகியோர் கொடியேற்றி கடந்து வந்த பாதை குறித்து எடுத்துரைத்தனர். இந்நிகழ்வில் 400க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## தூத்துக்குடி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 36வது அமைப்பு தின விழா தூத்துக்குடி வட்டக்கிளை சார்பாக சங்க கட்டிடத்தில் கொண்டாடப்பட்டது. வட்டத் தலைவர் எஸ்.பி.கணேசன் சங்கக்கொடியேற்றியும், வட்ட செயலாளர் தே.முருகன் இனிப்பு வழங்கியும் வாழ்த்துக்களை தெரிவித்தனர். அமைப்பு தின நிகழ்வில் அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ந.வெங்கடேசன், துணைத் தலைவர், பொருளாளர் உள்ளிட்ட முன்னணி ஊழியர்கள் மற்றும் இல.இராமமூர்த்தி சிஐடியு மாவட்ட துணைத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கடலூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் மாவட்டத்தில் 36-வது சங்க அமைப்பு தின கொடியேற்றும் நிகழ்ச்சி 06.05.19 காலை 10.00 மணிக்கு கடலூர் சங்க அலுவலகத்தில் வட்டக் கிளை சார்பில் வட்ட தலைவர் வி.சிவபிரகாசம் தலைமையில் வட்ட பொருளாளர் அ.வேலு முன்னிலையில் மிக சிறப்பாக நடைபெற்றது. சம்மேளன கொடியை மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன், சங்கக் கொடியை மாவட்ட பொருளாளர் டி.இரவிச்சந்திரன் ஏற்றி வைத்தனர். மாவட்ட இணை செயலாளர் எஸ்.வெங்கடேசன் துணை இயக்குநர் சுகாதார பணிகள் அலுவலகம் முன்பாகவும், வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக மாநில செயலாளர் என்.ஜனார்த்தனனும் கொடியேற்றி சிறப்புரையாற்றினர். தொடர்ந்து இனிப்புகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சாலை பணியாளர் சங்க மாநில துணை தலைவர் கே.ரவி, மாவட்ட செயலாளர் என்.இராமர், மாவட்டத் துணை தலைவரும், தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் பா.மகேஷ், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் ஏ.சுந்தரமூர்த்தி, தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர் முன்னேற்ற சங்க மாவட்ட தலைவர் கார்த்திக் உள்ளிட்ட முன்னணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மேலும் காட்டுமன்னார்கோயில் வட்ட கிளையில் வட்ட செயலாளர் சி.மச்சேந்திரன் தலைமையிலும், பண்ருட்டி வட்டத்தில் வட்ட செயலாளர் கே.செந்தில்குமார் தலைமையிலும், வேட்பூரில் வட்ட பொருளாளர் செந்தில் தலைமையிலும் சங்க அமைப்பு தின நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

## மதுரை

மாவட்டத்தில் அமைப்பு தின கொடியேற்றம் மொத்தம் 17 இடங்களில் நடைபெற்றது இதில் மாநில, மாவட்ட, வட்ட கிளை மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள், முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ❖

# அகவிலைப் படியை வழங்க வலியுறுத்தி அரசு ஊழியர் சங்கம் ஆயிரம் இடங்களில் ஆர்ப்பாட்டம்

மத்திய அரசு ஊழியர்களுக்கு 01.01.2019 முதல் 3% அகவிலைப் படியை உயர்த்தி வழங்கிய நிலையில் இன்று வரை தமிழக அரசு ஊழியர் களுக்கு அகவிலைப்படி உயர்த்தி வழங்காமல் வஞ்சித்து வருகிறது.

01.01.2019 முதல் 3% அகவிலைப் படியை உயர்த்தி வழங்கிடவும், நிலுவைத் தொகையை ரொக்கமாக வழங்கிட வலியுறுத்தியும் 10.05.2019 அன்று தமிழகம் முழுவதும் அனைத்து அலுவலகங்கள் முன்பாக 1000 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்திட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம் முடிவு செய்தது அதனடிப்படையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### நாகை

மாவட்டத்தில் 40 அலுவலகங்கள் முன்பாக ஆர்பாட்டம் நடைபெற்றது. நாகை அரசு மருத்துவ மனையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் விளக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், நாகை தொழிற் சங்கக் கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாநிலச் செயலாளர் எம்.சௌந்தரராஜன் நிறைவுரையாற்றி னார். வட்டப் பொருளாளர் எம்.மேகநாதன் நன்றியுரையாற்றினார். 60 பெண்கள் உட்பட 100 பேர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

### ஈரோடு

மாவட்டத்தில் 10 வட்டக் கிளைகளில் உள்ள 37 அலுவலகங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது. இதில் பெண் ஊழியர்கள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

### மதுரை

மாவட்டத்தில் மொத்தம் 39 அலுவலகங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் உட்பட 1200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் ஆ.செல்வம், மாவட்டத் தலைவர் சு.ஜெயராஜராஜேஸ்வரன் மாவட்டச் செயலாளர் க.நீதிராஜா உள்ளிட்ட மாவட்ட, வட்டக் கிளை, தோழமைச் சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### கரூர்

மாவட்டத்தில் மொத்தம் 24 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. க.பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி ஆகிய வட்டக் கிளைகளில் அரவக்குறிச்சி இடைத்தேர்தல் காரணமாக ஆர்ப்பாட்டம் நடத்தப்படாமல் ஒவ்வொரு அலுவலகத்திலும் துண்டு பிரசுரம் வழங்கி விளக்கக் கூட்டம் நடைபெற்றது.

கரூர்-1 வட்டக்கிளை - இக்கிளையின் சார்பில் மொத்தம் 6 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வணிகவரித்துறை அலுவலக வளாகம், மதுத்துவத்துறை இணைஇயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அலுவலகம், உதவி ஆணையர் வணிகவரி(மேற்கு) அலுவலகம், காதி அலுவலகம், இந்து அறநிலையத்துறை அலுவலகம் மற்றும் தாலுக்கா அலுவலகம் ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநிலத் துணைத்தலைவர் மு.சுப்பிரமணியன், மாவட்டத் துணைத்தலைவர் கண்ணன், வட்டக் கிளை நிர்வாகிகள் பாலசுப்பிரமணி, அறிவழகன், சண்முகம் உட்பட பல்வேறு துறை சார்ந்த அரசு ஊழியர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

கரூர்-2 வட்டக்கிளை சார்பில் மொத்தம் 7 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஊராட்சி ஒன்றிய அலுவலகம், தோட்டக்கலை அலுவலகம், மாவட்ட தொழிற்பயிற்சி மையம், வேளாண்மைத்துறை அலுவலக வளாகம், கூட்டுறவுத்துறை அலுவலக வளாகம், கால்நடை பராமரிப்புத்துறை அலுவலகம், நெடுஞ்சாலைத் துறை அலுவலக வளாகம் ஆகிய இடங்களில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் கே.சக்திவேல், வட்டக் கிளை நிர்வாகிகள் செல்வம், லட்சுமணன், செல்வராஜ், சங்கர், பிரகாஷ் உள்ளிட்ட பல துறை ஊழியர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணராயபுரம் வட்டக்கிளை சார்பில் கிருஷ்ணராயபுரம், அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் சங்கத்தின் மாவட்ட மகளிர் அமைப்பாளர் கே.செல்வராணி தலைமையில்

ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மருத்துவமனை ஊழியர்கள் 20க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கடலூர் வட்டக் கிளை சார்பில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் மற்றும் மாவட்ட துணைத் தலைவர் வெங்கடாச்சலம் ஆகியோர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வட்டக் கிளை செயலாளர் பிரேம் உள்ளிட்ட வட்டக் கிளை நிர்வாகிகள் மற்றும் வளர்ச்சித் துறை ஊழியர்கள் 20க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

க.பரமத்தி மற்றும் அரவக்குறிச்சி வட்டக் கிளையில் சட்டமன்ற இடைத்தேர்தல் காரணமாக ஆர்ப்பாட்டம் நடைபெறவில்லை. அனைத்து அலுவலகங்களுக்கும் வட்டக் கிளை நிர்வாகிகள் சென்று ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் துண்டு பிரசுரங்கள் வழங்கி விளக்கக்கூட்டம் நடத்தப்பட்டது.

குளித்தலை வட்டக் கிளை சார்பில் 6 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தாலுக்கா அலுவலகம், வணிக வரித் துறை அலுவலகம், அரசு பொது மருத்துவமனை அலுவலக வளாகம், வேளாண்மைத் துறை துணை இயக்குநர் அலுவலகம், குளித்தலை ஊராட்சி ஒன்றிய அலுவலகம், தோகைமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டப் பொருளாளர் பொன்.ஜெயராம், வட்டக்கிளை தலைவர் க.பாண்டிக்கண்ணன், வட்டச் செயலாளர் சரவணன், வட்டக் கிளை துணைத் தலைவர் லெனின் உட்பட பல்வேறு துறை ஊழியர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

மண்மங்கலம் வட்டக் கிளை சார்பில் 3 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தாலுக்கா அலுவலகம், அரசு பொது மருத்துவ மனை அலுவலக வளாகம், வெண்ணைமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநிலத் துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன், வட்டக் கிளை தலைவர் சுரேஷ்குமார், வட்டச் செயலாளர் முத்துக்குமார் உட்பட பல்வேறு துறை ஊழியர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

## தஞ்சாவூர்

பேராவூரணி வட்டக் கிளையில் சார்பில் பூக்கொலை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மாவட்ட துணைத் தலைவர் கை.கோவிந்தராஜன் தலைமையில் நடைபெற்றது. துறைவாரி சங்க நிர்வாகிகள் அ.க.தங்கராசு, ஜெ.ராஜசேகரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். இதில் 30 பெண்கள் உட்பட 50 பேர் பங்கேற்றனர்.

## கடலூர்

கடலூர் வட்டத்தில் வணிக வரி அலுவலகம், மாவட்ட கருவூல அலுவலகம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகிய இடங்களில் வட்ட தலைவர் வி.சிவபிரகாசம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட தலைவர் ஆர்.பாலசுப்ரமணியன், மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் மாவட்ட இணை செயலாளர் எஸ்.வெங்கடேசன், மாவட்ட பொருளாளர் டி.ரவிச்சந்தின் மற்றும் மாநில செயலாளர் என்.ஜனார்த்தனன் உட்பட துறைவாரி சங்க மாநில மாவட்ட நிர்வாகிகள், அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட செயலாளர் ஆர்.மனோகரன் உட்பட முன்னணி தோழர்கள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்ட உரை நிகழ்த்தினர். வட்ட பொருளாளர் ஏ.வேலு நன்றி கூறினார்.

பண்ருட்டியில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக வட்ட செயலாளர் கே.செந்தில்குமார் தலைமையிலும், சிதம்பரத்தில் வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் அரசு மருத்துவமணை முன்பாக வட்ட செயலாளர் ஆர்.தமிழ்செல்வன் தலைமையிலும் புவனகிரி வட்டத்தில் வட்டச் செயலாளர் ஆர்.தாமரைசெல்வன் தலைமையில் வட்ட ஆட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், காட்டுமன்னார்கோயில் வட்டம் குமராட்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டச் செயலாளர் சி.மச்சேந்திரன் தலைமையிலும், விருத்தாசலம் வட்டத்தில் வட்டத் தலைவர் ஆனந்தகுமார் தலைமையில் தேசிய நெடுஞ்சாலை துறை அலுவலகம், ஊரக வளர்ச்சி துறை அலுவலகத்திலும் நடைபெற்றது. இதில் வட்ட செயலாளர் ஜி.விஜயகுமார் மாவட்ட துணைத் தலைவர் டி.நாட்டுத்துரை உள்ளிட்ட துறைவாரி சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்ட உரையாற்றினர். மாவட்டம் முழுவதும் 13 இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 104 பெண் ஊழியர்கள் உள்ளிட்ட 392 பேர்கள் கலந்துக் கொண்டனர்.

❖

## திருச்சி

மாவட்டம் முழுவதும் 12 அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைச் தலைவர் லட்சுமணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் வளனரசு கோரிக்கை விளக்கவுரை ஆற்றினார். மருதுபாண்டி, பழனியப்பன், பால்பாண்டி மற்றும் பல முக்கிய நிர்வாகிகள் மற்றும் அனைத்து ஊழியர்களும் திரளாக கலந்து கொண்டார்கள். மாநில செயலாளர் எ.பெரியசாமி நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் பழனிச்சாமி நன்றி கூறினார்.

## பெரம்பலூர்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு (சிறுவர் பூங்கா அருகில்) மாலை நேர ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் பி.தயாளன் தலைமையேற்றார். மாவட்ட செயலாளர் குமரிஅனந்தன், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் பொன். ஆனந்தராசு, தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை சாலைப் பணியாளர்கள் சங்க மாவட்ட செயலாளர் சுப்பிரமணின், பொது சுகாதாரத் துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் ராஜ்மோகன், தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் மாவட்ட தலைவர் பாரதிவளவன், தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட அமைப்பாளர் சின்னசாமி, தமிழ்நாடு கல்லூரி ஆசிரியர் கழக நிர்வாகி பேராசிரியர் செல்வகுமார் ஆகியோர் கலந்து கொண்டு கோரிக்கையை வலியுறுத்தி உரையாற்றினார்கள். இறுதியில் சங்க மாவட்ட பொருளாளர் சிவக்குமார் நன்றி கூறினார்.

## விழுப்புரம்

விழுப்புரம், செஞ்சி, திண்டிவனம், வானூர், உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர், சின்னசேலம், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி என மாவட்டம் முழுவதும் 38 அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் திட்டமிட்ட நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டங்களில் வட்டக்கிளை நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் என அனைவரும் பங்கேற்று உரையாற்றினர். இதில் 380 பெண் ஊழியர்கள் உள்ளிட்ட 900 பேர் பங்கேற்றனர்.

❖

## சேலம்

மேட்டூரில் உள்ள வருவாய்த் துறை, ஐடிஐ, வேளாண்மைத் துறை, நகராட்சி பொதுப்பணித் துறை, மீன் வளத்துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகிய 7 இடங்களில் 100 பேர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ❖

# வடசென்னை நிகழ்வுகள்

36வது அமைப்பு தினத்தை முன்னிட்டு 14 இடங்களில் கொடியேற்றும் நிகழ்ச்சி நடை பெற்றது. இதில் 125 பெண் ஊழியர்கள் உட்பட 625 பேர் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் வட்டக் கிளை நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அகவிலைப்படிக்கான அரசாணையை வெளியிடக் கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டம் முழுவதும் 8 இடங்களில் நடை பெற்றது. 120 பெண்கள் உட்பட 400 பேர் பங்கேற்றனர்.

11.5.2019 அன்று மகளிருக்கான வகுப்பு சங்கத்தின் மாநில அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி தலைமை யேற்றார். மகளிர் துணைக் குழு அமைப்பாளர் ஜெ.சரஸ்வதி வரவேற்றார். சங்கத்தின் முன்னாள் மாநில மகளிர் துணைக் குப உறுப்பினர் பிரசன்னா "ஸ்தாபனத்தில் பெண்களின் பங்கேற்பு" என்ற தலைப்பிலும், வழக்கறிஞர் சுசிலாஆனந்த் "இயக்கமும் பெண்களின் பங்கேற்பும்" என்ற தலைப்பிலும் வகுப்பெடுத்தனர். இதில் 75 பெண் ஊழியர்கள் பங்கேற்றனர். மாவட்ட மகளிர் துணைக் குழு உறுப்பினர் விஜயா நன்றி கூறினார்.

# அமைப்பு தினம்

## விழுப்புரம்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், செஞ்சி வட்டார வளர்ச்சி அலுவலகம், கள்ளக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம், சின்னசேலம் வட்டார வளர்ச்சி அலுவலகம், உளுந்தூர்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலகம், தொழிற் பயிற்சி மையம்,, வட்டாட்சியர் அலுவலகம், திருக்கோயிலூர் வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய இடங்களில் சங்கக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் வட்டக் கிளை நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ❖

## கருவூலக் கணக்குத் துறையை டிஜிட்டல்மயமாக்கி அரசு ஊழியர், ஆசிரியர்களின் தனி மனிதஉரிமைகளை பாதிக்கு வகையில் கார்ப்பரேட் நிறுவனமான விப்ரோ நிறுவனத்துடன் போடப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்திடக் கோரும் இயக்க நடவடிக்கைகள்

அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சம்பளம் இல்லை என மிரட்டும் போக்கை தமிழக அரசு உடனடியாக கைவிட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தல்

**நிதியும், சொகுசும் தனியார் நிறுவனத்திற்கு**
**வலியும் பழியும் அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கா?**

**அடிப்படை கட்டமைப்புகள் செய்யப்படாமலேயே**
**அவசரகதியில் நடைமுறைப்படுத்தப்படும் மின்னணு சம்பளமுறை!**
**ஆமை வேகத்தில் இயங்கும் தளம்!!**

**அரசு செய்யும் குளறுபடிக்கு அரசு ஊழியர்களுக்கு தண்டனையாம்!**
**ஊதியத் தரவுகளை பதிவேற்றாவிட்டால் அடுத்தமாதம் சம்பளம் கிடையாதாம்!**

**ஒப்பந்தம் செய்துகொண்ட தனியார் நிறுவனத்தை நிர்பந்திப்பதை விட்டுவிட்டு**
**உழைப்புச் சுரண்டலுக்கு ஆளான அரசு ஊழியர்களை மிரட்டுவதா?**

**ஊழியர்களை மிரட்டும் போக்கை உடனடியாக கைவிட்டுவிட்டு**
**புதிய மென்பொருள் தயாராகும்வரை பழைய மென்பொருளிலேயே**
**சம்பளப் பட்டியலை தயாரிக்க அனுமதிக்கக் கோரி**

முன்தயாரிப்புகளை முழுமையாக முடிக்காமல் அவசர கதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட IFHRMS-ஆல் கடந்த ஒரு வருட காலமாக கருவூல கணக்குத்துறை ஊழியர்கள் மீது உழைப்புச் சுரண்டல் மற்றும் நேர விரயம் என்கிற வன்முறை நிகழ்த்தப்படுவதையும்

ஒரு கார்ப்பரேட் நிறுவனம் தன் ஊழியர்களை எப்படி கையாளுமோ அதேபோன்று கருவூல கணக்குத் துறை மற்றும் இதர அலுவலக ஊழியர்களை கருவூலத் துறை மூலமாக விப்ரோ நிறுவனம் கையாள்வதையும் கண்டித்து

## தமிழக அரசுக்கு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கண்டனம்

தமிழக அரசு 26.06.2018ஆம் தேதி செய்தி வெளியீட்டு எண்.409 மூலம் "ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித மேலாண்மைத் திட்டம்" என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியிட்டுள்ளது. இதன்படி தற்போது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூலப்பட்டியல் ஏற்பளிக்கும் முறை வலைதள சம்பளப் பட்டியல் மற்றும் மின்னணு வழி ஓய்வூதியம் நிதி மேலாண்மை மற்றும் மனிதவள மேலாண்மை ஆகியவற்றுடன்

இணைக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. இந்த அறிவிப்புக்கு ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் என பெயரிடப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள மனித வள மேலாண்மைத் திட்டம் என்பதன் பொருள் ஊழியர் பணியிடங்களை காலியாக்கி முற்றாக ஒழித்துக்கட்டி அதை தனியார்வசம் ஒப்படைத்து விடுவதாகும். மக்களுக்கு நல்லது செய்வதாக கூறிக்கொண்டு பல மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை நிறுத்தி விடுவது என்பது மக்களுக்கு எதிராக... மாணவர்களுக்கு எதிராக... இளைஞர்களுக்கு எதிராக... அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு எதிராக... அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணைகளும் அரசின் முடிவுகளும் அம்பலப்படுத்திக் காட்டுகின்றன.

சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் மக்கள் நலனை சூறையாடப் பார்க்கும் அதிகார வர்க்கத்தினருக்கும், அரசியல்வாதிகளுக்கும், ‘‘மக்கள் நலன்” என்ற வார்த்தையின் உள்ளார்ந்த அர்த்தம் புரியவில்லை என்பதைவிட புரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் நினைப்பதுதான் இதன் பொருள். இத்தகைய அரசாணைகளும் உத்தரவுகளும் ஜனநாயகம் என்ற நிரபராதியின் குரல்வளையை இறுக்கும் சர்வாதிகார கயிறுகளாகும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தது போல் தற்போது அரசு அலுவலகங்கள் இல்லை. புதிய பொருளாதார திட்டம் என்ற திட்டம் எல்லா மக்களும் எல்லாமும் பெற வேண்டும் என்ற சமத்துவ சித்தாந்தத்தை சுக்குநூறாக்கி யார் எப்படி போனால் என்ன, மக்களின் சுமைகளையும் நலன்களையும் அரசு ஏற்கக்கூடாது என்கிற வேதாந்தத்தை விதைத்தது. அதுதான் கொஞ்ச கொஞ்சமாக செயல் வடிவம் பெற்று மக்கள் நலன் பொதுசேவை எல்லாவற்றையும் ஏப்பம் விட்டுவிடும் அரக்கனாக உருமாறியிருக்கிறது. ஒரு சில அமைப்புகள் மட்டும் இதை எதிர்த்து தொடர்ந்து போராடிக் கொண்டேயிருக்கின்றன. தொலைதூரப் பார்வையில் பார்க்கும்போது இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டேயிருந்தால், மக்கள் நலனும், உதவும் உள்ளமும், சேவை மனப்பான்மையும் முற்றிலுமாக ஒழிந்து, நாடு முழுவதும் காட்டுமிராண்டித்தனமே நிறைந்து நிற்கும்.

எந்த ஒரு அரசு அலுவலகத்திற்குச் சென்றாலும் அங்கு பல இருக்கைகள் காலியாகவே காணக்கிடப்பது கண்கூடே. ஓய்வுபெற்றுச் சென்றவர்கள், பணியிட மாற்றம் சென்றவர்களின் இடங்கள் அப்படியே விடப்பட்டிருப்பதும் இன்றுவரை தொடர்கிறது. இது ஆண்டுதோறும் அதிகரித்து அதிகரித்து தற்போது பெரும்பாலான அரசு அலுவலகங்களில் மூன்று அல்லது நான்கு அரசு ஊழியர்களின் வேலையை ஒரு ஊழியரே பார்க்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. அனைத்துத் துறை சங்கங்களிலிருந்தும் எழும் கோரிக்கைகளில் நிரந்தர இடம் பிடித்துவிட்ட கோரிக்கையாக காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பது தற்போது கோரிக்கையாக இல்லாமல் ஓலமாக மாறியுள்ளது. 2001 முதல் 2005 வரை அரசுத் துறைகளில், ஆசிரியர் பணியிடங்களில் எந்த ஊழியரும் சேர முடியாத வகையில் பணி நியமனத் தடைச் சட்டம் அரசுப் பணிகளை முடக்கி விட்டது. மக்கள் சேவை செய்யக்கூடிய அரசு அதிகாரிகள் இல்லாமல் மக்கள் நலத்திட்டங்கள் எப்படி அவர்களுக்குப் போய்ச்சேரும்? ஊழியர்களை நியமிக்காமல் அரசு காலியான பணியிடங்களை நிரப்பாமல் விட்டதன் மூலம் அரசு ஊழியர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை என்கிற பழியை அரசு ஊழியர்கள் மீது மக்களுக்கு இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. போதுமான ஊழியர்கள் இல்லாமல் அரசின் திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் அனைத்து துறைகளில் ஊழியர்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

ஆக, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ஆதிசேஷய்யாவின் நோக்கம் எந்தெந்தப் பணிகளை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியார்வசம் ஒப்படைக்கலாம் என்பதை விட எந்தெந்தப் பணிகளை மட்டும் அரசின் வசம் விட்டு வைக்கலாம் என்பதானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அரசுப் பணிகளை சீரமைக்கும் முறையாக இது காட்சிப்படுத்தப்பட்டாலும் ஆதிசேஷய்யா குழுவின் நோக்கம் அரசுப் பணியிடங்களை குறைப்பதைத் தாண்டி, தனியார் வசம் அவற்றை ஒப்படைப்பதற்கான நடைமுறை ஏற்பாடே என்பதில் ஐயமில்லை.

கருவூல கணக்குத் துறையை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலமாக இனி அரசு ஊழியர்களின் பணிப் பதிவேடுகள் பொது ஆவணமாக மாற்றப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு அரசு ஊழியரின் தனிப்பட்ட அடிப்படை உரிமை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. சம்பள பட்டியல்களை, வருகைப் பதிவேடுகளை மின்னணு தொழில் நுட்பத்திற்குள் கொண்டு சேர்க்குமுன் அதற்கு உண்டான அடிப்படை கட்டமைப்புகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். ஆனால் அதை இவ்வரசு செய்யவில்லை. டிஜிட்டல் தொழில் நுட்பத்தை அரசு ஊழியர்களுக்கு கற்றுக்கொடுக்காமல் அதை அப்படியே ஒப்பந்த முறையில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொடுக்கும் ஏற்பாடானது இனிமேல் இந்தப் பணியிடங்கள் நீக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிகுறியாகும்.

ஏற்கெனவே ஆதார் விவகாரத்தில் தனிமனித உரிமைகளை பாதிக்கும் வகையில் உள்ளதாக உச்சநீதிமன்றமே சுட்டிக்காட்டியுள்ள நிலையில் கருவூல கணக்குத் துறையில் இப்போது கொண்டு வரக்கூடிய

மாற்றம் என்பது அரசு இயந்திரத்தை தனியார் வசம் ஒப்படைக்கும் ஏற்பாடாகும். ஏற்கெனவே ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு வேலை செய்வதானது, அரசாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும் என்று போராடி வரும் நிலையில், இதுபோன்ற செயல்கள் அரசு நிரந்தரப் பணியிடங்களையே இல்லாமல் செய்துவிடும் என்பது நமக்கு அடிக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கை மணியாகும்.

தமிழக முதல்வர் இந்த விஷயத்தில் உடனடியாக தலையிட்டு தமிழக மாணவர்கள் இளைஞர்களின் நலன்களும் வேலை வாய்ப்பு வசதிகளும் பாதிக்காத வகையில் வேலைவாய்ப்பு பெறுவதை உறுதி செய்ய வேண்டும். அரசு நிறுவனங்களை தனியார் மயமாக்கும் போக்கின் மூலம் மக்கள் நலன் என்பது கேள்விக்குறியாகிவிடும் என்றும் மீண்டும் தெரிவிக்க விரும்புகிறோம். எனவே கருவூலக் கணக்குத் துறையை தனியார் நிறுவனங்களுக்கு தாரை வார்த்துள்ளதை திரும்பப் பெற வேண்டும் என்றும் ஏற்கெனவே இந்த அரசுக்கு நாம் முறைது செய்திருந்தோம்.

ஆனால் தமிழக அரசோ எட்டுவழிச்சாலை திட்டம் போல யார் சொல்வதையும் கேட்காமல் தமிழகத்தில் பல்வேறு அரசுத் துறைகளில் பணியாற்றி வரும் 12 லட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்களின் சம்பளப் பட்டியலை மின்னணு முறையில் தயாரிக்கும் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தும் பொறுப்பை விப்ரோ என்ற தனியார் நிறுவனத்திடம் தமிழக அரசு ஒப்படைத்தது. இதற்கான மென்பொருளை (IFHRMS) தயாரித்து அதில் பணிப் பதிவேடு பராமரிப்பு, சம்பளம் மற்றும் இதர பட்டியல் தயாரிப்பு, ஓய்வூதியம் சமர்ப்பித்தல் ஆகியவற்றை 1.8.2018 தொடங்கி 15.10.2018க்குள் பதிவேற்றம் செய்ய அரசு ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்றும், அதற்கு மாவட்ட வாரியாக நோடல் ஆபிசர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் 30.05.2018-ல் அரசுமுறை கடிதம் அனைத்து துறைகளுக்கும் அனுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து 21.06.2018-ல் இன்னொரு அரசுமுறை கடிதம் அதே செய்திகளுடன் கூடுதலாக புதிய மென்பொருள் நடைமுறைபடுத்தப்பட்ட பின்னர் பழைய மென்பொருளில் தயாரிக்கப்படும் சம்பளம் மற்றும் இதர பட்டியல்கள் ஏற்றுக்கொள்ளப்படாது என்று தெரிவிக்கப்பட்ட அனைத்து துறைகளுக்கும் அனுப்பப்பட்டிருந்தது.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு திட்டம் IFHRMS (Integrated Finance and Human Resource Management System) சுமார் ரூ.300 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ள நிலையில் அதன் முன்தயாரிப்புகளை மேற்படி நிறுவனம் முழுமையாக செய்து முடித்ததா? அரசு ஊழியர்களுக்கு அதில் போதிய பயிற்சியும் அனுபவமும் கிடைத்துள்ளதா? என்பதை ஆராயாமலேயே அடிப்படை கட்டமைப்புகள் கூட ஒழுங்காக முடிக்காத நிலையில் இதனை உடனே நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதும், அப்படி செய்யாத துறைகளில் பணிபுரியும் அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் ஒவ்வொரு மாதமும் சம்பளம் வாங்க முடியாது என்ற மிரட்டல் தொனியையும் அதிகாரிகள் தொடர்ந்து கடைபிடித்து வருகிறார்கள். கார்ப்பரேட் நிறுவனங்களில் கடைபிடிக்கப்படும் அதே அதிகாரவர்க்க மனோபாவம் கருவூலத்துறை மூலமாக கையாளப்படுவதை அரசு ஊழியர்கள் கவனித்து வருகின்றனர்.

சம்பளம், ஓய்வூதியம் போன்ற வாழ்வாதார பிரச்சனைகள் சம்பந்தப்பட்ட திட்டங்களை உருவாக்கும் போது அவற்றில் காலதாமதத்தை பொருட்படுத்தாது அனைவரும் அதன் செயல்பாட்டை புரிந்த பின்னர் திட்டத்தை செயல்படுத்துவது என்பது எல்லோருக்கும் உசிதமான செயலாக இருக்கும். ஆனால் பயிற்சி பெற்றுள்ள அரசு ஊழியர்களில் பெரும்பாலானோருக்கு இந்த திட்டம் முழுமையாக புரியாத நிலையில் புதிய மென்பொருளில் சம்பளப் பட்டியலை தயாரிக்க வேண்டும் என்ற கண்டிப்பு தவறான சம்பளப் பட்டியலுக்கும், பணப்பரிமாற்றத்திற்கும் வழி வகுக்கும். ஓரளவுக்கு பயிற்சி பெற்றவர்கள் கூறும் கருத்தானது, "இந்த IFHRMS-ஐ கையாளுவதில் ஏராளமான குறைபாடுகள் உள்ளது. அதிலும் ஒவ்வொரு தனி அலுவலகத்திற்கும் வெவ்வேறு மாதிரியான குறைபாடுகள் உள்ளன'' என்பதாகும்.

*ஒவ்வொரு அலுவலகத்தின் ஊழயர்களின் சம்பளம் தொடர்பான அடிப்படை தரவுகளை IFHRMS\ன் Master--ல் பதிவேற்றம் செய்யும் பொருட்டு DDO template என்கிற தளத்தில் பதிவேற்றம் செய்யும்படி கருவூலத் துறையால் 2017ஆம் ஆண்டு கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்த தகவல்கள் ஏற்கனவே NIC-யிடம் உள்ள நிலையில், அரசு ஊழியர்கள் தங்களின் கடுமையான பணிச்சுமைக்கு இடையில், பெரும் நேரத்தை செலவிட்டு ஒவ்வொரு ஊழியர்களின் சம்பளம் தொடர்பான தரவுகளை பதிவேற்றம் செய்தனர்.இந்த தகவல்களை WIPRO நிறுவனம் DDO template தளத்தில் இருந்து IFHRMS Master-க்கு மாற்றும் போது ஏராளமாக குழப்பங்களும், தவறுகளும் நடந்துள்ளது.*

*உதாரணத்திற்கு, ஒரு துறையின் சார்பில் தரப்பட்ட ஊழியர்களின் சம்பள விவரங்களான, Post Type, GO, DP Code போன்றவை IFHRMS MASTER-ல் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வகையிலும், DDO*

template-ல் பதிவேற்றம் செய்யப்பட்ட தரவுகளுக்கு முரணாகவும் WIPRO-வால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, ஒரு பட்டியல் கூட முழுமையாக தயாரிக்க முடியாத குழப்ப நிலைதான் உருவாகி உள்ளது. சம்பள கணக்கு அலுவலகங்கள் மற்றும் மாவட்ட கருவூலகங்களில் இந்த குறைபாடுகளை புரிந்து கொள்ளக் கூடிய தொழில்நுட்ப ஊழியர்களும் இல்லை.

WIPRO சார்பில் பணியமர்த்தபட்டுள்ள ஊழியர்கள் Out sourcing மூலம் வந்த ஊழியர்கள் என்பதனால் இரண்டு மாதங்களுக்குள் சம்பள பற்றாக்குறையால் அந்த வேலையில் இருந்து விலகிவிடுவதால் நம் சார்பில் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகள் விப்ரோவில் மீண்டும் வருகிற புதிய ஊழியர்களிடம் கொடுக்கப்படும். அது மீண்டும் கால விரையத்தைத்தான் உருவாக்கும்.

ஆமை வேகத்தில் சில நேரங்களிலும், நத்தை வேகத்தில் சில நேரங்களிலும் இயங்க கூடிய IFHRMS தளத்தில் ஒரு Non Salary பட்டியல் தயாரிக்க ஒரு அரசு ஊழியர் தன்னுடைய ஒரு முழு நாளை முழுமையாக செலவு செய்து அதற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டாலும் கூட அதை கருவூலம் கணக்கு துறைக்கு சமர்ப்பிக்க முடியாத நிலைதான் இன்று வரை உள்ளது.

இவ்வாறு IFHRMS--ல் எழுகின்ற குறைபாடுகளை கருவூலத்துறைக்கு (WIPRO) தெரிவிக்கும் பொருட்டு முதலில் ஒரு Whats App குழு உருவாக்கப்பட்டது, பின்னர் மின்னஞ்சல் முகவரி கொடுக்கப்பட்டது. Whats App குழுவில் wipro-வின் outsourcing ஊழியர்கள் அந்த குறைகளையும் சந்தேகங்களையும் தீர்ப்பார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனாலும் அவர்கள் அரசு ஊழியர்களின் பல சந்தேகங்களுக்கு மழுப்பலான பதில்களையே தரும் நிலைதான் இன்றுவரை உள்ளது.

மின்னஞ்சலில் அளிக்கப்படும் புகார்களுக்கு Ticket ID என்ற ஒரு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த Ticket ID என்கிற ஒரு அத்தாட்சி எண் அனுப்பப்படுகிற ஒவ்வொரு மின்னஞ்சலுக்கும் அனுப்பப்படும். அப்படி அனுப்பப்பட்டால் நம் புகார் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது என்று பொருள் தெரிவிக்கப்பட்டது. ஆனால் ஒரு புகார் அளிக்கப்பட்டு ஒரு மாதம் கழித்துதான் அந்த Ticket ID கொடுக்கப்படுகிற நிலை இருந்தது. இந்த நிலையில் இரண்டு வாரங்களுக்கு முன் புதிய மின்னஞ்சல் முகவரி (helpdesk@karuvoolam.tn.gov.in) அறிமுகப்படுத்தப்பட்டு இனி புகார்கள் இதன் மூலம்தான் பெறப்படும் என்று சொல்லப்பட்டது. இதில் நம் முன் நிற்கும் கேள்வி இதுநாள்வரை பழைய மின்னஞ்சலுக்கு (tad.helpdesk@wipro.com) அனுப்பப்பட்ட புகார்களின் நிலை என்னவென்று தெரியவில்லை.

ஒவ்வொரு மாதமும், கடந்த மாதம் Webpar Roll--ல் சமர்ப்பிக்கப்பட்ட சம்பளம் மற்றும் இதர பட்டியல்களை 10 தேதிக்குள் IFHRMS--ல் சமர்ப்பிக்க வேண்டும் என்று கருவூலத் துறையால் கேட்கப்படுகிறது. சரியான வேகத்தில் இயங்காத IFHRMS இணையதளம், மென்பொருளில் உள்ள தொழில்நுட்ப கோளாறுகள், ஒருவாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் பராமரிப்பு என்று கூறி முழுவதுமாக இணையத்தளத்தை முடக்கி வைத்தல் போன்ற விடயங்கள் எதையும் கருத்தில் கொள்ளாமல் தமிழ்நாடு கருவூலத்துறை, மற்ற துறை அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் இதர பட்டியல்களை IFHRMS--ல் தயாரிக்கவில்லை என்று கூறி மாத ஊதியத்தையும், இதர பட்டியல்களையும் நிறுத்திவைக்கிற அராஜகத்தை கடந்த 6-மாதங்களாக செய்து வருகிறது. மாறாக இவர்கள் துறைகளின் மூலம் கருவூல கணக்கு துறைக்கு வருகிற தரவுகளை நிறுத்தி வைப்பதில்லை.

IFHRMS--யை நடைமுறைப்படுத்த இதுநாள் வரை தங்களுடைய முழு ஒத்துழைப்பை ஆர்வத்துடன் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அளித்து வருகின்றனர். ஆனால் WIPRO-வின் இயலாமையை கேள்வி கேட்காமல் அரசு ஊழியர்களின் மிக பெரிய உழைப்பு சுரண்டலையும் நிகழ்த்தி விட்டு, முதலாளி மனப்பான்மையோடு அவர்களின் சம்பளத்தையும் நிறுத்தி வைப்பதாக அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் மிரட்டுவது என்பது கண்டிப்பாக கண்டிக்கத்தக்க ஒன்றாகும்.

ஒரு திட்டத்தை ஒரு தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்து விட்டு அவர்கள் தாங்கள் வாக்களித்த காலக்கெடுவுக்குள் முடிக்கமுடியாத நிலையில் அல்லது முடிக்கத் தெரியாத நிலையில் பலவித குளறுபடிகளுடன் உள்ள ஒரு மென்பொருளை வைத்துக் கொண்டு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் பலவித சந்தேகங்களுக்கு உடனடி விளக்கம் கிடைக்காத நிலையில் சம்பளப் பட்டியலை புதிய மென்பொருளில் பதிவிறக்கம் செய்து தரச் சொல்லி வற்புறுத்துவதும், அப்படி தராவிட்டால் சம்பளம் கிடைக்காது என்று மிரட்டும் தொனியில் அச்சுறுத்துவதும் சரியான நடைமுறையல்ல.

ஆமை வேகத்தில் இயங்கும் தளம், அடிப்படை கட்டமைப்புகள் செய்யப்படாமலேயே அவசரகதியில் நடைமுறைப்படுத்தப்படும் மின்னணு சம்பளமுறை, ஊதியத் தரவுகளை பதிவேற்றாவிட்டால் மாதச் சம்பளம்

கிடையாதாம். தனியார் நிறுவனமும் அரசும் செய்யும் குளறுபடிகளுக்கு அரசு ஊழியர்களுக்கு ஏன் தண்டனை.

ஒப்பந்தம் செய்துகொண்ட தனியார் நிறுவனத்தை நிர்பந்திப்பதை விட்டுவிட்டு உழைப்புச் சுரண்டலுக்கு ஆளான அரசு ஊழியர்களை மிரட்டுவதை சர்வாதிகாரத்தின் உச்சம் என்று சொல்லாமல் வேறென்ன என்பது? அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை இந்த அரசு தொடர்ந்து எதிரிகளாக பாவிப்பதும், தொடர்ந்து வஞ்சிப்பதும், மிரட்டுவதும், அடிமைகள் போல் நடத்துவதும் மிகுந்த கண்டனத்திற்குரியது. அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் ஒரு அரசாங்கத்திற்கு அச்சாணி போன்றவர்கள் என்பதையும் அவர்கள்தான் ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையில் நல்லுணர்வு ஏற்படுத்தும் பாலம் என்பதை மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத முதலமைச்சரும் அவரது சக அமைச்சர்களும் கூடியவிரைவில் உணர்வார்கள்.

அரசு ஊழியர்களை, ஆசிரியர்களை அடுத்தமாதம் சம்பளம் இல்லை என் மிரட்டும் போக்கை தமிழக அரசு உடனடியாக கைவிட்டு அடிப்படை கட்டமைப்புகள் முழுமையாக செய்து முடிக்கப்படும் வரை பழைய முறையிலேயே சம்பளப் பட்டியலை தயாரித்தளிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் காலதாமதத்திற்கான காரணம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அல்லாதபோது அதற்கான பழியும் வலியும் அவர்களுக்கு கூடாது என்ற இயற்கை விதியை இதயம் உள்ளவர்கள் உணர வேண்டும்.

*சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் புதிய மென்பொருள் தயாராகும் வரை பழைய மென்பொருளிலேயே சம்பளப் பட்டியலை தயாரிக்க அனுமதிக்கக் கோரியும், கார்ப்பரேட் நிறுவனமான விப்ரோ ஒப்பந்தத்தை ரத்து செய்து தமிழக அரசே ஏற்று நடத்திட வலியுறுத்தியும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில்*

- ➔ **7.6.2019 அன்று தமிழகம் முழுவதும் அனைத்து (STO) சார்நிலை கருவூல அலுவலகங்களின் எதிரில் ஆர்ப்பாட்டம்**
- ➔ **25.6.2019 அன்று தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட கருவூல அலுவலகம் / சம்பள கணக்கு அலுவலகம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம்**
- ➔ **2.7.2019 அன்று சென்னையில் கருவூல கணக்குத்துறை ஆணையர் அலுவலகம் முற்றுகை போராட்டம்**

*அரசுத் துறையை பாதுகாத்திட.... கார்ப்பரேட் நிறுவன ஊடுருவலை தடுத்திட....*
*நமது உரிமைகள் பாதுகாக்கப்பட.... அனைவரும் அணிதிரள்வோம் வாரீர்!*

---



## சங்கம் என்பது உயிர் மூச்சே

**(அச்சம் என்பது மடமையடா திரை மெட்டு)**

சங்கம் என்பது உயிர் மூச்சே
எங்கும் முழங்குவோம் அதன் பேச்சை
கரத்தால் உழைப்போர் கருத்தால் உழைப்போர்
அனைவரின் கேடயம் சங்கமன்றோ... (சங்கம்)

உலகுக்கு உணவு படைக்கும் உழவன்
உரிமைகள் பெற்றிட வேண்டும் சங்கம்
உற்பத்திக் கடவுள் தொழிலா ளர்கள்
உரிமைப் போரிட வேண்டும் சங்கம்.. (சங்கம்)

வேலை கிடைக்கா வாலிபனுக்கும் வேண்டும் சங்கம்
காளை எனவே பயில்வோர்க்கிங்கே மாணவர் சங்கம்...
தோளுயர் பெண்கள் பாது காப்புக்கு
போர்க் குணத்துடனே வேண்டும் சங்கம்... (சங்கம்)

ஆசிரியர்கள் ஊழியர் தமக்கு உள்ள சங்கம்
விரிந்த பார்வை சமூகத் தீர்வை
நோக்கி நடத்திட வேண்டும் சங்கம்
போக்கிட மில்லா அனைவர்க்கும்கூட வேண்டு சங்கம்...
(சங்கம்)

உறுப்பினர் நலனே உயிரெனக் கொண்டு
பொறுப்புடன் இயங்கும் வேளையிலே
சோதனை பலவே தழுவிடும் நிலையிலும்
வேதனைநீங்க வேண்டும் சங்கம்... (சங்கம்)

ஆட்சிகள் மாறும் காட்சிகள்மாறா
பிரித்தாள் சூழ்ச்சிகள் புரிவோரே
சூழ்ச்சிகள் வீழ்த்த வியூகம் அமைத்து
எழுச்சி பெறுவதே நமது சங்கம்... (சங்கம்)

உழைக்கும் வர்க்கப் பிரிவொன்று போரில்
வேடிக்கை பார்க்கக் கூடாது
தோளொடு தோள் கொடு
வர்க்கப் போரெனும் உணர்வுடனே... (சங்கம்)

**பெரணமல்லூர் சேகரன்**

## இருப்பின் அடையாளம்

நேற்றின் அவலங்கள்
இன்றின் துயரங்கள்
நாளையின் எதிர்பார்ப்புகள்
இவையெல்லாம்
என்னை என்னாகவே
இருக்க விட்டதில்லை எப்போதும்!

ஆணவத்தாலும்
அதிகாரத்தின் வழியாகவும்
கோரமாக்கப்பட்டிருக்கிறது
என் முகம்!

தமிழனின் ஆதிக்குடி பற்றியும்
தமிழின் பழம்பெருமை பற்றியும்
சொல்லிக் கொண்டிருப்பதில்
சலித்துப் போயிற்று என்பேனா!

நான் தமிழன்
எனக்கொரு அடையாளம் வேண்டும்
அதற்கு கவிதை போதாது
துப்பாக்கி - கத்தி - கோடா
அல்லது இவற்றுக்கு ஈடாக
ஏதாவதொன்று வேண்டும் உடனே!

**- சந்திரபோஸ் சுதாகர்**

## கோணல் மனசு

சொமாலியா சோகம்
கொசோா கொடுமை
உகாண்டா பசி
உலகின்
பசித்த தேசங்களின்
நிலைகளைக் கேட்டு
படித்து ஆராய்ந்து... ஆராய்ந்து
எல்லோரிடமும்
வாய்கிழிய பேசத்தான்
செய்கிறேன்
வறுமை தீர்க்கும் வழிபற்றி!

கொஞ்சமும்
வெட்கப்பட்டதேயில்லை நான்,
பயணப்பாதைகளில்
வற்றிய வயிறோடு கையேந்தும்
உயிர்களிடம்
உதடு பிதுக்கி நடக்க!

**- இ.இசாக்**

# 17வது நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற இடைத் தேர்தலில் தமிழகத்தில் பதிவான தபால் வாக்குகள் விவரம்

**Tamil Nadu + Puducherry**
**BALLOT PAPER / Postal Vote Percentage**
Status Known For 39 out of 40 Constituencies

| Const. No. | Constituency | DMK Alliance Votes | % | ADMK Alliance Votes | % | Others Parties Votes | % | Total |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | Arakkonam | 5,502 | 65.6% | 1,707 | 20.4% | 1,174 | 14.0% | 8,383 |
| 12 | Arani | 4,370 | 65.4% | 1,660 | 24.8% | 652 | 9.8% | 6,682 |
| 4 | Chennai central | 1,761 | 63.7% | 578 | 20.9% | 425 | 15.4% | 2,764 |
| 2 | Chennai North | 1,952 | 70.3% | 392 | 14.1% | 431 | 15.5% | 2,775 |
| 3 | Chennai South | 1,632 | 66.7% | 497 | 20.3% | 318 | 13.0% | 2,447 |
| 27 | Chidambaram | 1,828 | 48.0% | 1,578 | 41.4% | 401 | 10.5% | 3,807 |
| 20 | Coimbatore | 3,409 | 65.0% | 1,184 | 22.6% | 648 | 12.4% | 5,241 |
| 26 | Cuddalore | 2,566 | 57.5% | 1,549 | 34.7% | 346 | 7.8% | 4,461 |
| 10 | Dharmapuri | 6,678 | 61.3% | 3,222 | 29.6% | 994 | 9.1% | 10,894 |
| 22 | Dindigul | 2,710 | 61.0% | 769 | 17.3% | 960 | 21.6% | 4,439 |
| 17 | Erode | 4,662 | 80.5% | 643 | 11.1% | 485 | 8.4% | 5,790 |
| 14 | Kallakurichi | 4,752 | 79.8% | 790 | 13.3% | 410 | 6.9% | 5,952 |
| 6 | Kancheepuram | 3,917 | 75.4% | 940 | 18.1% | 338 | 6.5% | 5,195 |
| 39 | Kanniyakumari | 2,608 | 45.3% | 2,704 | 47.0% | 440 | 7.6% | 5,752 |
| 23 | Karur | 4,179 | 80.1% | 696 | 13.3% | 343 | 6.6% | 5,218 |
| 9 | Krishnagiri | 1,902 | 53.2% | 1,145 | 32.0% | 529 | 14.8% | 3,576 |
| 32 | Madurai | 2,923 | 64.6% | 647 | 14.3% | 956 | 21.1% | 4,526 |
| 28 | Mayiladuthurai | 3,447 | 79.7% | 530 | 12.3% | 349 | 8.1% | 4,326 |
| 29 | Nagapattinam | 3,296 | 75.5% | 525 | 12.0% | 544 | 12.5% | 4,365 |
| 16 | Namakkal | 2,923 | 75.3% | 601 | 15.5% | 360 | 9.3% | 3,884 |
| 19 | Nilgiris | 2,369 | 80.4% | 360 | 12.2% | 216 | 7.3% | 2,945 |
| 25 | Perambalur | 6,692 | 83.5% | 740 | 9.2% | 581 | 7.3% | 8,013 |
| 21 | Pollachi | 3,325 | 74.6% | 801 | 18.0% | 329 | 7.4% | 4,455 |
| 40 | Puducherry | 335 | 65.9% | 112 | 22.0% | 61 | 12.0% | 508 |
| 35 | Ramanathapuram | 2,358 | 47.0% | 1,517 | 30.2% | 1,147 | 22.8% | 5,022 |
| 15 | Salem | 3,849 | 67.5% | 1,258 | 22.1% | 597 | 10.5% | 5,704 |
| 31 | Sivaganga | 2,102 | 63.7% | 565 | 17.1% | 634 | 19.2% | 3,301 |
| 5 | Sriperumbudur | 2,531 | 70.2% | 653 | 18.1% | 420 | 11.7% | 3,604 |
| 37 | Tenkasi | 5,810 | 61.2% | 1,654 | 17.4% | 2,029 | 21.4% | 9,493 |
| 30 | Thanjavur | 5,357 | 80.5% | 432 | 6% | 864 | 13.0% | 6,653 |
| 33 | Theni | 2,335 | 42% | 1,354 | 24% | 1,881 | 33.8% | 5,570 |
| 1 | Thiruvallur | 3,199 | 66% | 1,063 | 22% | 578 | 11.9% | 4,840 |
| 36 | Thoothukkudi | 2,798 | 51% | 1,437 | 26% | 1,219 | 22.4% | 5,454 |
| 24 | Tiruchirappalli | 5,618 | 76% | 620 | 8% | 1,113 | 15.1% | 7,351 |
| 38 | Tirunelveli | 5,404 | 69% | 1,203 | 15% | 1,213 | 15.5% | 7,820 |
| 18 | Tiruppur | 2,932 | 75% | 575 | 15% | 384 | 9.9% | 3,891 |
| 11 | Tiruvannamalai | 4,553 | 63% | 1,829 | 25% | 798 | 11.1% | 7,180 |
| 8 | Vellore | | | | | - | | |
| 13 | Viluppuram | 2,910 | 61% | 1,426 | 30% | 405 | 8.5% | 4,741 |
| 34 | Virudhunagar | 6,216 | 66% | 1,274 | 14% | 1,903 | 20.3% | 9,393 |
| | G Total | 1,37,710 | 67% | 41,230 | 20% | 27,475 | 13% | 2,06,415 |

**Tamil Nadu Assembley Constituencywise**
**BALLOT PAPER / Postal Vote Percentage**
Status Known For 21 out of 22 Constituencies

| Const. No. | Constituency | DMK Alliance Votes | % | ADMK Alliance Votes | % | Others Parties Votes | % | Total |
|---|---|---|---|---|---|---|---|---|
| 48 | Ambur | 600 | 80.3% | 97 | 13.0% | 50 | 6.7% | 747 |
| 198 | Andipatti | 1097 | 63.1% | 259 | 14.9% | 383 | 22.0% | 1739 |
| 134 | Aravakurichi | 82 | 51.3% | 72 | 45.0% | 6 | 3.8% | 160 |
| 46 | Gudiyattam | 821 | 78.4% | 141 | 13.5% | 85 | 8.1% | 1047 |
| 61 | Harur | 910 | 54.4% | 350 | 20.9% | 413 | 24.7% | 1673 |
| 55 | Hosur | 845 | 76.5% | 211 | 19.1% | 48 | 4.3% | 1104 |
| 187 | Manamadurai | 972 | 57.2% | 402 | 23.7% | 325 | 19.1% | 1699 |
| 130 | Nilakkottai | 742 | 66.1% | 248 | 22.1% | 132 | 11.8% | 1122 |
| 217 | Ottapidaram | 240 | 36.8% | 209 | 32.0% | 204 | 31.2% | 653 |
| 60 | Pappireddippatti | 957 | 60.3% | 461 | 29.0% | 169 | 10.6% | 1587 |
| 209 | Paramakudi | 909 | 55.4% | 420 | 25.6% | 313 | 19.1% | 1642 |
| 12 | Perambur | 403 | 80.0% | 41 | 8.1% | 60 | 11.9% | 504 |
| 199 | Periyakulam | 1592 | 71.0% | 311 | 13.9% | 339 | 15.1% | 2242 |
| 5 | Poonamallee | 345 | 78.4% | 59 | 13.4% | 36 | 8.2% | 440 |
| 204 | Sattur | | | | | - | | |
| 39 | Sholingur | 697 | 64.6% | 274 | 25.4% | 108 | 10.0% | 1079 |
| 116 | Sulur | 32 | 37.2% | 39 | 45.3% | 15 | 17.4% | 86 |
| 174 | Thanjavur | 1896 | 80.4% | 174 | 7.4% | 289 | 12.3% | 2359 |
| 195 | Thiruparankundram | 58 | 26.7% | 74 | 34.1% | 85 | 39.2% | 217 |
| 33 | Thiruporur | 757 | 60.3% | 390 | 31.1% | 108 | 8.6% | 1255 |
| 168 | Thiruvarur | 949 | 76.3% | 115 | 9.2% | 180 | 14.5% | 1244 |
| 213 | Vilathikulam | 543 | 55.0% | 137 | 13.9% | 307 | 31.1% | 987 |
| | G Total | 15,447 | 65% | 4,484 | 19% | 3,655 | 15% | 23,586 |

भारत निर्वाचन आयोग Election Commission of India

## அடையாளம்

பீட்டர் வீட்டு வாசலில் கோதுமை
ரகீம் வீட்டு வாசலில் ராகி
ராமன் வீட்டு வாசலில் அரிசி
கொறித்து விட்டு .....
ஓரத்தில் மல்லிச் செடியில்
அமர்ந்து ......
சுகமாய் எச்சமிட்டு
வானில் பறக்கும்
சிட்டுக்குருவியின்
எந்த சிறகிலும்
அடையாளமேதுமில்லை ......

இமயச் சிகரத்திலிந்து
அலை ததும்பும் குமரி வரை
எண்ணிலடங்கா
கோடுகள் கிழித்த ரணத்தை
ஒவ்வொரு முறையும்
நல்லிணக்க மருந்திட்டு
கவனமாய் அழிக்கப்படுவதால்
அடையாளமேதுமின்றி ......

- ஆர்.நடராஜன்

## வெளியே....... உள்ளே .......

வெளியே ........
சாமானியரின் குரலாய்
அழைப்பு மணியோசை கேட்டால்
சேவகன் அழைத்துச் செல்வான்
மன்னனிடம் .........

உள்ளே .........
அதிகார குரலாய்
அழைப்பு மணியோசை கேட்டால்
சாமானியர் காத்திருந்து,வரிசையாய்,
பணிவாய், பயமாய்
அனுமதிக்கப்பவர் .........

பிரச்சனை தீர்க்க
மன்னன் காத்திருந்தான்

பிரச்சனை தீர
மக்கள் காத்திருப்பு .........

- ஆர்.நடராஜன்

## நாகை வட்டக் கிளை மாநாடு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் நாகப்பட்டினம் வட்ட மாநாடு நாகை அரசு ஊழியர் சங்க கூட்ட அரங்கில் 11.05.19 அன்று வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. வட்ட இணைச் செயலாளர் டி.சசிகலா வரவேற்புரையாற்றினார். மாநிலச் செயலாளர் எம்.சௌந்தரராஜன் துவக்கவுரையாற்றினார்.

செயலாளர் எம்.தமிழ்வாணன் வேலை அறிக்கையையும், பொருளாளர் எம்.மேகநாதன் வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். உறுப்பினர்கள் விவாதங்களுக்குப் பின்னர் இரு அறிக்கைகளும் ஏற்கப்பட்டன.

வட்ட துணைத் தலைவர்கள் கே.புகழேந்தி, ப்பி.மோகன், வட்ட இணைச் செயலாளர்கள் என்.அமுதா, ப்பி.ரமேஷ் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

பின்னர் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வில் வட்டத் தலைவராக எம்.மேகநாதன், செயலாளராக எம்.தமிழ்வாணன், வட்ட பொருளாளராக சி.பாலசுப்பிரமணியன், துணைத் தலைவர்களாக சி.வாசு, ரவிச்சந்திரன், இணைச் செயலாளர்களாக ப்பி.ரமேஷ், என்.அமுதா, பிச்சைப்பிள்ளை, மாவட்ட செயற்குழு உறுப்பினராக தேன்மொழி (ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், மாவட்டப் பொருளாளர் பா.ராணி, மாவட்ட துணைத் தலைவர் எஸ்.ஜோதிமணி, மாவட்ட இணைச் செயலாளர்கள் கே.இராஜு, து.இளவரசன், தரங்கம்பாடி செயலாளர் சி.வாசுகி, நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு.சிவகுமார், ஓய்வூதியர் சங்கத்தின் சொ.கிருஷ்ணமூர்த்தி, சிஐடியு மாவட்டச் செயலாளர் சீனி.மணி, ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கத்தின் வி.பாலசுப்பிரமணியன், நீதித்துறை ஊழியர் சங்கத்தின் ஜி.ராமகிருஷ்ணன், சத்துணவு ஊழியர் சங்கத்தின் சி.கலியபெருமாள், சாலைப் பணியாளர் சங்கத்தின் எஸ்.கணேசன், கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் எம்.மரகதம், தமுஎகச நாகைக் கிளைச் செயலாளர் சு.மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் நிறைவுரையாற்றினார். இறுதியாக வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் நன்றி கூறினார்.

©
Government of Tamil Nadu
2019

MANUSCRIPT SERIES

FINANCE (Allowances) DEPARTMENT

G.O.Ms. No.151, Dated 20th May 2019.

*(Vihar, Vaikasi-06, Thiruvalluvar Aandu 2015)*

**Abstract**

**ALLOANCES** - Dearness Allowance - Enhances Rate of Dearness Allowance from **1st January 2019** - Orders - Issued.

Read the Following:

1. G.O.Ms.No.313, Finance (Allowances) Department, dated : 18.9.2018.

2. rom the Govenment of India, Ministry of Finance, Department of Expenditure, New Delhi Office Memorandum No.1/1/2019-E-II(B), dated 27.2.2019.

---

ORDER

In the Government Order first read above, orders were issued sanctioning revised rate of Dearness Allowance to State Government employees as detailed below:

| Date from which payable | Rate of Dearness Allowance (per month) |
|---|---|
| (1) | (2) |
| 1.7.2018 | 9 per cent of Basic Pay |

2. Government of India in its Office Memorandum second read above has now enhanced the Dearness Allowance payable to its employees from the existing rate of 9% tp 12% with effect from 1st January 2019.

3. Following the orders issued by the Government of India, the Government sanction the revised rate of Dearness Allowance3 to the State Government employees as indicated below:

| Date from which payable | Rate of Dearness Allowance (per month) |
|---|---|
| (1) | (2) |
| 1.7.2019 | 12 per cent of Basic Pay |

4. The additional installment of Dearness Allowance payable under these orders shallbe paid in cash with effect from 1.1.2019.

5. The payment of arrears of Dearness Allowance from January, 2019 to April, 2019 shall be drawn and disbursed immediately by existing cashless mode of Electronic Clearance System (ECS). While working out the revised Dearness Allowance, fraction of a rupee shall be rounded off to next higher rupee if such fraction is 50 paise and above and shall be ignored if it is less than 50 paise.

6. The Government also direct that the revised Dearness Allowance sanctioned above shall be admissible to full time employee who are at present getting Dearness Allowance and paid from contingencies at fixed monthly rates. The revised rates of Dearness Allowance sanctioned in this order shall not be admissible to part time employees

7. The revised Dearness Allowance sanctioned in this order shall also apply to the teaching and non-teaching staff working in aided educational institutions, employees under local bodies, employees governed by the University Grants Commission/ All India Council for Technical Education scales of pay,, the Teachers/Physical Education Directors/Librarians in Government and Aided Polytechnics and Special Diploma Instituions, Village Assistants in Revenue Department, Noon Meal Organisers, Child Welfare Organisers, Anganwadi Workers, Cooks, Helpers, Panchayat Secretaries/Clerks in Village Panchayat under Rural Development and Panchayat Raj Department and other employees drawing pay in the prescribed Level of Pay in the Special Pay Matrix.

8. The expenditure shall be debited to the detailed head of account “03. Dearness Allowance” under the relevant minor, sub-major and major heads of account.

9. The Treasury Officers / Pay and Accounts Officers shall make payment of the revised Dearness Allowance when bills are presented without waiting for the authorization from the Principal Accountant General (A&E) Tamil Nadu, Chennai-18.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.SHANMUGAM**

**ADDITIONAL CHIEF SECRETARIAT TO GOVERNEMENT**

# ராமன் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவனா?

இந்தியாவில் நடந்த மக்களவைத் தேர்தல் திருவிழா பரபரப்பில் ஒரு விஷயம் சந்தடி சாக்கில் மறக்கடிப்பட்டுவிட்டது.

பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவதாக பெண்கள் புகார் கொடுக்கும் சம்பவங்கள் நாடு முழுவதும் பல்லாயிரக் கணக்கில் நடந்துள்ளன. இது போன்ற புகார்களை விசாரிக்க அனைத்து பணியிடங்களிலும் விசாகா கமிட்டி அமைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதுபோன்ற புகார்களில் சிக்கி செல்வாக்கை இழந்த பிரபலங்கள் ஏராளம். சாதாரண நபர் மீது இத்தகைய குற்றச்சாட்டு வந்தால், பத்திரிகைகளில் மீடியாக்களில் தொடர் செய்திகள், காவல்துறை வழக்குப் பதிவு, கைது, ஜாமீன், குற்றப்பத்திரிகை தாக்கல், வழக்கு விசாரணை, மேல்முறையீடு என குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் முதல் பத்து ஆண்டுகள் வரை வழக்கு இழுபறியை சந்திக்க வேண்டிய கட்டாயம் உண்டு. ஆனால் இதுபோன்றதொரு புகார் நாட்டின் அனைத்துப் பிரச்னைகளுக்கும் நீதி வழங்கும் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் மீது வந்தபோது நாடே இந்த வழக்கை உற்றுப் பார்க்கும் நிலை ஏற்பட்டது.

உச்சநீதிமன்ற முன்னாள் பெண் ஊழியர் ஒருவர் தலைமை நீதிபதிக்கு எதிராக பாலியல் குற்றம் சுமத்தி எழுத்து மூலம் ஒரு முறையீட்டை அளித்து அதன் நகலை உச்சநீதிமன்றத்தின் அனைத்து நீதிபதிகளுக்கும் அனுப்பியிருந்தார். ‘பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிரான தடை சட்ட’த்தின் வரம்புகளுக்குள் உச்சநீதிமன்ற நீதிபதிகள் வராததால் இந்த குற்றச்சாட்டை விசாரிக்க மூன்று நீதிபதிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இத்தகைய குழுவின் விதிகள் ‘பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு எதிரான தடைச்சட்டம்’ கொண்டு வருவதற்கு முன்பு ’’இந்திரா ஜெய்சிங் எதிர் உச்சநீதிமன்றம்’’ வழக்கில் 2003ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்யின்படி உருவாக்கப்பட்டவையாகும். தனக்கு பாலியல் தொந்தரவு கொடுக்கப்பட்டது என்ற முறையீட்டை தாக்கல் செய்த பெண்ணிற்கும் மற்றவர்களுக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் சாத்தியமானவற்றைச் செய்வதற்கு பதிலாக மேற்படி ‘உள் விசாரணைக்குழு’வில் நீதிபதிகளைத் தவிர வெளியார் யாரும் நியமனம் செய்யப்படவில்லை. மட்டுமின்றி பாதிக்கப்பட்ட பெண் தனக்கு ஆதரவாக எவரையும் அமர்த்திக் கொள்ளவும் அனுமதிக்கப்படவில்லை இந்த விசாரணை வீடியோ மூலமாகவும் பதிவு செய்யப்படவில்லை. பாதிக்கப்பட்ட பெண் தனது வாக்குமூலத்தைப் பார்க்கவும் அனுமதிக்கப்படவில்லை. இதற்கு நீதிமன்றத் தரப்பில், மேற்குறிப்பிட்ட இந்திரா ஜெய்சிங் வழக்கில் கூறப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் காரணம் காட்டப்பட்டன.



தன்னுடைய வாக்குமூலத்தை பார்க்கக் கூட அனுமதிக்கப்படாததை எதிர்த்து, பாதிக்கப்பட்ட பெண் விசாரணையின் பாதியிலேயே வெளியேறி விட்டார். அதனால் எக்ஸ்பார்ட்டி எனப்படும் ஒருதலைப்பட்ச தீர்ப்பு வழங்கப்பட்டது. ’தலைமை நீதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டில் எந்த முகாந்திரமும் இல்லை’ என்பதே தீர்ப்பு. தீர்ப்பின் மற்ற விவரங்களை வெளியிட ’இந்திரா ஜெய்சிங்’ வழக்கில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி வெளியிட வேண்டிய அவசியம் இல்லை என்றும் உத்தரவில் கூறப்பட்டு முடித்து வைக்கப்பட்டது.

இந்த விசாரணை முறை நாடு முழுவதும் உள்ள சட்டத்துறையினர் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் ஏராளமான ஐயப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. “சட்டத்தின் முன் அனைவரும் சமம்’’ என்ற சொற்றொடர் இப்போது “சட்டத்தின் முன் அனைவரும் உண்மையில் சமமா?’’ என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. சாதாரண குடிமக்கள் வழக்காடிகளாக இதுநாள்வரை கண்டுவரும் நீதிமன்ற நடைமுறைகளுக்கு முற்றிலும் வேறுபட்டதாக தற்போது நடந்து முடிந்துள்ள விசாரணை அமைந்துள்ளது. நீதிமன்றங்களின் வாயில்களில் கைது செய்யப்பட்டோருக்கு உள்ள உரிமைகள், பாதிக்கப்பட்டோருக்கு உள்ள உரிமைகள் என்றெல்லாம் அறிவிப்பு பலகைகளையும் பதாகைகளையும் தொங்கவிட்டுள்ள நீதித்துறை, ஒரு பெண், இந்திய நீதித்துறையின் தலைமை நீதிபதியின் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்காக அவருக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை சட்ட உரிமைகளை மறுத்திருப்பதன் மூலம் நீதித்துறை அதன் வெளிப்படைத் தன்மையிலிருந்தும், நேர்மையான விசாணையிலிருந்தும் விலகிச் சென்றுவிட்டதாக சட்டவல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

தகவல் அறியும் உரிமை சட்டம் வருவதற்கு முன் பிறப்பிக்கப்பட்ட ஒரு தீர்ப்பின் வழிகாட்டு நெறிமுறைகளை தற்போதைய காலசூழலுக்கு பயன்படுத்துவதற்கு முன்பு அவை தற்காலத்தில் நடைமுறையில் உள்ள சட்ட வழிமுறைகளுக்கு ஏற்றனவாக உள்ளனவா என்பதை உள்விசாரணைக் குழு ஆராய்ந்திருக்க வேண்டும். திறந்த மனதுடன் உள்விசாரணை நீதிபதிகள் குழு, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அவரின் வாக்குமூலங்களை படித்துப் பார்க்க வாய்ப்பும் வீடியோ விசாரணையும் விசாரணை அறிக்கையும் வழங்கியிருக்க வேண்டும் என்றும் சட்ட வல்லுநர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். மேனாள் நீதியரசர் சந்துரு அவர்கள், "வெளியிடப்பட்டுள்ள தீர்ப்பு எக்ஸ்பார்ட்டி ஆர்டராக வெளிவந்துள்ளதால் உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்ய சட்டத்தில் இடம் உள்ளது. ஆனால் விசாரணை அறிக்கையே தரவில்லை எனும்போது அந்தப்பெண் எப்படி மேல்முறையீடு செய்ய முடியும். விசாரணைக் குழு தந்துள்ள அறிக்கையின் மீது உச்சநீதிமன்றத்தில் முடிவு எடுக்கும் அதிகாரம் யாரிடம் உள்ளது என்பதே குழப்பான சூழல்தான். அனைத்து நீதிபதிகளும் எடுக்கும் முடிவுக்கு தலைமை நீதிபதி கட்டுப் படுவாரா அல்லது அதைமீறி அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என்றால் அந்த பெண்ணுக்கு அடுத்த வாய்ப்பு என்ன என்பது பற்றி எதுவுமே தெளிவாக சொல்லப்படவில்லை. யார் மீது குற்றச் சாட்டு உள்ளதோ அவரிடமே அறிக்கையை கொடுத்து விட்டு, புகார் கூறிய பெண்ணுக்கு அறிக்கையை தரமாட்டோம் எனக் கூறுவது எந்த வகையில் சரியானதாக இருக்கும்?'' என்று கேள்வி எழுப்பியுள்ளார். "புகார் அளித்த பெண் வேண்டுமென்றே அவதூறாக குற்றம் சுமத்தியிருந்தால் அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியும் என்ற நிலையில் அந்தப் பெண் பயமின்றி விசாரணையை எதிர்கொள்வதற்கான சூழலை ஏற்படுத்தித் தர வேண்டியது நீதிமன்றத்தின் கடமை'' என்கிறார் வழக்கறிஞர் சாந்தகுமாரி.

நடைபெற்றுள்ள நிகழ்வுகள் அனைத்தும் மூத்த வழக்கறிஞர்கள், நடுவர்கள், பெண் சமூக ஆர்வலர்கள் மற்றும் குடிமக்களை அதிர்ச்சியடைய வைத்திருக்கின்றன. நீதி, நியாயம் நேர்மை போன்றவற்றின் கடைசி புகலிடமாக அவர்கள் உச்சநீதிமன்றத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கையை இது தூள்தூளக்கியிருக்கிறது. ராமன் சொன்னதற்காக மட்டுமல்ல, நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் தான் ஒழுக்கமானவள் என்பதை நிரூபிப்பதற்காக இராமயணக் கதையில் சீதை சிதையில் இறங்கி தன்னை தூய்மையானவள் என்று நிரூபித்தாள். இப்போது ராமனின் முறை. ராமன் ஒழுக்கமானவனா என்பதை நாட்டு மக்கள் கேட்கிறார்கள்? இராமன் தன்னுடைய ஒழுக்கத்தை நிரூபிக்க வேண்டும். இல்லாவிட்டால் மக்களின் நம்பிக்கைகளின் மேல் எழுப்பப்பட்டிருக்கும் நீதிமன்றங்களின் உயர்ந்த கோபுரங்கள் தரைமட்டமாகிவிடும்.

**- குணாஜி**

---

## குச்சி மிட்டாயும் குருவி ரொட்டியும்

அரசு ஊழியர் ஆசிரியர்களின் பணிப்பதிவேடு & ஊதியம் ஆகியவற்றில் IFHRMS எனும் புதிய திட்டத்தின் மூலம் அற்புதம் நிகழுமாம்!!!!

தமிழக அரசு 2015லிருந்து இணையதளம் மூலம் மட்டுமே ஊதியம் பெற முடியும் என்றவுடன் எல்லாமே டிஜிட்டல் மையப்படுத்தி விட்டோம். இனிமேல் உங்கள் ஊதியத்தை உங்கள் அலைபேசியிலோயோ மின்னஞ்சலிலோயோ பார்த்துக் கொள்ளலாம் என்றார்கள். இன்று குச்சி மிட்டாயும் குருவி ரொட்டியுமே மிச்சம். இத்தனை ஆண்டுகளாகியும் முழுமையாக இணைய தளத்தில் பட்டியல் தயாரிக்க முடியவில்லை. அதனால் நமக்கு என்ன???

இப்போ IFHRMSல் அற்புதம் நிகழுமென கூறிவருவது மற்றுமொரு ஏமாற்று என்று நிலைமையை பார்த்தவர்களுக்கு கண்கூடாக தெரியவரும்...

அதிலும் வரும் 15ஆம் தேதி ஒப்பந்தம் போட்ட அந்த கம்பெனியே பட்டியல் தயார் செய்யும் என்ற சமீபத்திய தகவல் பலத்த சிரிப்பையே வரச்செய்கிறது...

அந்த இணையதளத்தில் நுழைந்து ஏதாவதொரு கிளிக் செய்துவிட்டு தனியார் டிராவல்ஸ் ஏஜென்சி மூலம் குளு, மணாலிக்கு இன்பச் சுற்றுலாவே சென்று வந்துவிடலாம். அப்புறமும் சுத்திக்கொண்டு தான் இருக்கும். அது சுத்துற சுத்த பாத்தா இந்த வெயிலுக்கு நமக்கே ஒரு மாதிரி ஆகி விடுகிறது.... இதில் அத்தனை அற்புதங்களும் நிகழும் என்பது மீண்டுமொருமுறை ஏமாற்று என்பது விரைவில் தெரியவரும். இதற்கும் 300 கோடி ரூபாய்க்கு மேல் நமது வரிப்பணம் மற்றும் அரசு ஊழியர்களின் உழைப்பு வீணாகிறதே என்பதே நமது கவலை.....

இதே வேகத்தை இதை செயல்படுத்த துடிக்கும் கருவூலத் துறை ஆணையர் அரசு ஊழியர்களின் 'காப்பீட்டு திட்டத்திலும்' காட்டி கட்டணமில்லா சிகிச்சைக்கு உதவிடுவாரா? என்பதே நமது கேள்வி.

**க.நீதிராஜா**, மதுரை


## நம்மிடமிருந்து பணத்தை திருடி விட்டு தப்பிச் சென்றவர்கள்

### லலித் மோடி



இவர் செலுத்த வேண்டிய தொகை - ரூ.125 கோடி
தப்பிச் சென்ற வருடம் - 2015
இவர் தற்போது மல்டாவில் உள்ளார்.

### விஜய் மல்லையா



இவர் செலுத்த வேண்டிய தொகை - ரூ.9000 கோடி
தப்பிச் சென்ற வருடம் - 2016
இவர் தற்போது லண்டனில் உள்ளார்.

### ஜதின் மேத்தா



இவர் செலுத்த வேண்டிய தொகை - ரூ.7000 கோடி
தப்பிச் சென்ற வருடம் - 2016
இவர் தற்போது கரீபியனில் உள்ளார்.

### மேகுல் சோக்ஸி




இவர் செலுத்த வேண்டிய தொகை - ரூ.14357 கோடி
தப்பிச் சென்ற வருடம் - 2018
இவர் தற்போது கரீபியனில் உள்ளார்.

### நீரவ் மோடி



இவர் செலுத்த வேண்டிய தொகை - ரூ.22000 கோடி
தப்பிச் சென்ற வருடம் - 2018
இவர் தற்போது லண்டனில் உள்ளார்.



பிங்க், பச்சை, ஆரஞ்சு, ஊதா, மஞ்சள் மற்றும் நீலம்னு எல்லா கலர்லயும் பணம் வந்துருச்சு...

ஆனா அந்த கருப்பு பணம் மட்டும் இன்னும் வரல...

---



தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க 35-வது அமைப்பு தினத்தை ஒட்டி இன்று 19.05.19 காலை நாகப்பட்டினம் அரசு ஊழியர் சங்க கட்டிடம் முன்பு நாகை ஒன்றித் தலைவர் டி.சசிகலா தலைமையில் மாவட்டச் செயலாளர் கே.ராஜூ கொடியேற்றிவைத்து சங்க வரலாற்றை எடுத்துரைத்தார்.

ஒன்றிய துணைத்தலைவர் எஸ்.சேகர், அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன், வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் து.இளவரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றியச் செயலாளர் சி.கலியபெருமாள் நன்றி கூறினார்.

# திருவண்ணாமலையின் வரலாறும் அரசு ஊழியர் கட்டிடமும்

"ஒரு படைப்பின் பின்னாலிருக்கிற
வாழ்க்கையும்
அது சார்ந்த காலத்தின்
வரலாறும்
விளங்கிக் கொள்ளப்படாவிடில்
அது ஆமையின் மேலோடு பார்த்த
கதையாகவே முடியும்...
உள்ளாடும் உயிர் உணரப்படாமலே
போகும்"

மனித குலத்தின் வரலாறு என்பது வெறும் தோற்றம்... மாற்றம்... வளர்ச்சி... மரணம்... என்பவை மட்டுமல்ல... பூமிக்குள் புதைந்தவை வெறும் பூத உடல் மட்டுமல்ல, நூற்றுக்கணக்கான அரசுகள், ஆயிரக்கணக்கான கோட்டைகள், மொழிகள், சித்தாந்தங்கள் இன்னும்.. இன்றும்... எவையெல்லாமோ...!

நிலா, பூமிக்கு அருகிலிருக்கும் ஒரு துணைக்கோள் என்பதும், அதன் இரவு வெளிச்சம் வெறும் இரவல் வெளிச்சமென்பதும், அது புழுதி படிந்த ஒரு பாலைவனம் என்பதும், அங்கே சுவாசிக்க காற்று இல்லையென்பதும், விஞ்ஞானம் உணர்ந்த சமீப நூற்றாண்டு உண்மை, இன்னும் உணரப்படாத உண்மைகள் கோடானுகோடி...

உலகில் மாறாதிருப்பது மாற்றம் என்ப வார்த்தை ஒன்றுதான் என்பது தத்துவங்களுக்கெல்லாம் தலைமை தாங்கும் தத்துவம் ஆகும். அதன்படி அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கின்றன. மாறிக்கொண்டே இருக்கும் அனைத்திலும் உயிர் இருக்கிறது. அந்த மாற்றங்களையெல்லாம் மாற்றங்களில்லாமல் உணர வேண்டுமெனில் அவை அனைத்தும் வரலாற்று இக்கியமாகப் பதிவு செய்யப்பட வேண்டும். எனவே ஜீவரசம் மிகுந்த திருவண்ணாமலையின் வரலாறு இங்கே பதிவு செய்யப்பட வேண்டியது மட்டுமல்ல, அத்தியாவசியமானதும்கூட.

தமிழகத்தில் சங்க காலம் முதல் திருவண்ணாமலை பெரும் மதிப்புக்குரிய பகுதியாகவும், ஒரு கோவில் நகரமாகவும், சைவ திருத்தலமாகவும் இருந்து வந்துள்ளது. தேச விடுதலைக்குப் பின் திருவண்ணாமலை, வேலூர் இரண்டும் சேர்ந்த வடாற்காடு மாவட்டம் என்று அழைக்கப்பட்டது. பின்னர் வடாற்காடு வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களாக 30.9.1989 அன்று பிரிக்கப்பட்டது என்பது சுருக்கமான சமகால வரலாறு. ஆனால் திருவண்ணாமலை குறித்து அறியப்படாத வரலாறு நீண்ட நெடியதாகும்.

திருவண்ணாமலை ஒரு இறந்த எரிமலையாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன் அது வெடித்ததால் உருவான தீப்பிழம்பு நீரில் தோய்ந்து உருவானதுதான் "தக்காணம்" என்று வரலாறு பதிவு செய்துள்ளது. இங்கு கி.மு.1ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே மக்கள் நகரமைத்து வாழந்து வந்துள்ளனர். கி.மு. 4ஆம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றண்டு வரை பல்லவர்களின் முக்கிய நகராக விளங்கிய திருவண்ணாமலை கலை மற்றும் தமிழ், சமஸ்கிருத மொழிகளின் கல்வியில் சிறந்து விளங்கியுள்ளது. பல்லவர்களின் ஆட்சிக்கு முன் சென்னை, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய தற்கால மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்த தொண்டை மண்டலத்தின் முக்கிய நகராக விளங்கியுள்ளது.

திருவண்ணாமலை சோழ பேரரசன் ராஜேந்திரன் ஆளுகையிலும் இருந்துள்ளது. பேரரசன் ராஜேந்திரன் தன் வாழ்வின் இறுதி மூன்றாண்டுகளை திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள பாலாற்றங்கரையிலும், கூழமந்தல், பிரம்மதேயம் என்றழைக்கப்பட்ட பிரம்மதேசம் உள்ளிட்ட ஊர்களிலும் கழித்துள்ளார். பிரம்மதேசத்தில் பிறந்து வளர்ந்த வீரமாதேவி எனும் பெண்ணை மனைவியாக்கி கொண்டு மூன்றாண்டுகள் அப்பகுதியில் வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. பின்பு அங்கு ராஜேந்திர சோழனுடைய பள்ளிப்படை சந்திர மௌலீஸ்வர் கோவில் என்ற பெயரில் ஒரு ஆலயம் கட்டப்பட்டுள்ளது. அது இன்றும் நிஜங்களின் சாட்சியாக திகழ்கிறது.

வரலாற்றில்... இலக்கியத்தில்... புராணத்தில்... எண்ணற்ற பதிவுகளை பெற்றிருக்கின்ற திருவண்ணாமலை மாவட்டம் வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடைபெற்ற இந்திய விடுதலை போராட்டத்திலும் மகத்தான பங்களிப்பை செலுத்தியுள்ளது. இம்மாவட்டத்தை சார்ந்த பலரும் தனிநபர் சத்தியாகிரகம் கள்ளுக்கடை மறியல், அன்னிய துணி பகிஷ்கரிப்பு, உப்பு சத்தியாகிரகம், ஒத்துழையாமை இயக்கம், சட்டமறுப்பு இயக்கம் போன்ற இயக்கங்களில் பங்கேற்று தடியடி பட்டு, சறை தண்டனை பெற்றுள்ளனர் என்தோடு 1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தில் பெருமளவில் பங்கேற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இம்மாவட்டத்தை சார்ந்த அனைத்து மதத்தினரும் விடுதலை இயக்கத்தில் சேர்ந்த சுதந்திரம் பெற பாடுபட்டுள்ளனர். இந்து, முஸ்லீம் கலவரம் பலமுறை வெடித்தும்கூட இம்மக்களின் ஒற்றுமையால் அவையனைத்தும் பிசுபிசுத்து போயின. இம்மக்களின் மத்தயில் நிலவிய ஒற்றுமையை குலைக்க, இம்மாவ

சுதந்திர போராட்ட வீரர்களை அசாம், பூனா, அலிபுரம், மைசூர், கேரளா மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளில் உள்ள சிறைகளில் பிரித்தடைத்து தண்டனை வழங்கியது ஆங்கிலேய அரசு. இவையனைத்தையம் ஏற்றுக்கொண்ட இம்மாவட்ட விடுதலை போராளிகளின் சகிப்புத் தன்மை என்றும் பெருமையாக கருதப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்திய விடுதலை போரில் திருவண்ணாமலை மாவட்ட மக்களின் பங்கு மகத்தானது என்பதை மேற்காணும் உண்மைகளின் மூலம் நம்மால் உணர முடிகிறது. பெருமைமிகு இம்மாவட்டத்தில் தான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 12வது மாநில மாநாடு 2017 ஜனவரி 6,7,8 ஆகிய தேதிகளில் திருவண்ணாமலை மாநாடு திருப்புமுனை மாநாடு என்கின்ற கூற்றை உண்மையாக்கும் வகையில் எழுச்சியோடு அன்றைய மாநிலத் தலைவர் இரா.தமிழ்செல்வி தலைமையில் கம்பீரத்துடன் நடைபெற்றது. இம்மாநாட்டின் வரவேற்புக் குழு அமைத்து மாநாட்டு பணிகள் துரிதமாக செயல்படும்போது அன்றைய மாவட்டத் தலைவர் தங்கராஜ் மற்றும் மாவட்டச் செயலாளர் பாஸ்கரன் உள்ளிட்ட நிர்வாகிகளின் ஒருமித்த கருத்தாக "அரசு ஊழியர் சங்கத்திற்கென நிலம் வாங்குவது (மாநாடு முடிந்து)" என்று முடிவு செய்து ப.தண்டபானி என்பவரின் நிலத்தையும் தேர்வு செய்யப்பட்டது ஒரு குறிப்பிட்ட விலைக்கு.

அரசு ஊழியர்களின், ஆசிரியர்களும் ஏதோ பொருளாதார கோரிக்கைக்காகவும், பதவி உயர்வுக்காகவும் மட்டுமே போராடுபவர்கள் என்ற எண்ணத்துடன் இருந்த நிலத்தின் உரிமையாளர் ஜனவரி 8ஆம் தேதி பொது மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்ற பேரணியில் தமிழகமெங்கும் திரண்டு அவர்கள் கொடிகளை ஏந்தி வீறு நடை போட்டு கோஷமிட்ட வாசகங்கள் வேலையின்மைக்கு எதிராகவும், விவசாயிகளையும், விவசாயத்தையும் பாதுகாத்திடவும், நீட் தேர்வு ரத்து செய்து மாணவர்களை மாணவர்களை பாதுகாத்திடவும், ஜல்லிக்கட்டு போராட்டத்திற்கு ஆதரவாகவும் சிறு குறு தொழில்களை பாதுகாத்திடவும், பெண்களை பாதுகாத்திடவும், பென்சனை பெற்ற சமூக பாதுகாப்பை வழங்கிடவும் இப்படி சமூக மாற்றத்திற்கான பதாகைகளை உயர்த்தி பிடித்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் எழுப்பிய கோஷங்களால் உந்தப்பட்டு மக்கள் நலனுக்காக பயன்படும் அந்த இடத்தை தான் இலவசமாக அளிப்பதாக மாநாட்டு மேடையிலேயே அறிவிக்கப்பட்டது என்பதும் நமது ஸ்தாபனத்தின் அசைக்க முடியாத உறுதியே என்பதை உணர்த்தியது.

25.2.2017 அன்றே சங்க கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 12ஆம் மாநாட்டில் மாநில தலைவராக தேர்வு செய்யப்பட்ட மு.சுப்பிரமணியன் உள்ளிட்ட அனைத்து மாநில நிர்வாகிகளும் பங்கேற்றனர். உழைக்கும் வர்க்கம் மேம்பட உழைப்பாளர் தினமான மே 1, 2018ல் "திருவண்ணாமலை மாவட்ட புதிய சங்கக் கட்டிடம்" கட்டி முடித்து திறக்கப்படும் என்ற முழக்கத்துடன் புதியதாக மாவட்டத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட வி.வேடியப்பன் தலைமையில் கட்டிடப் பணிகளை துவங்கி அவரின் நேரடி பார்வையில் வேகமாக வளரத் துவங்கியது.

"நீரின்றி அமையாது உலகு" என்பதற்கேற்ப சங்கத்திற்கு போடப்பட்ட "போர்வெல்" தண்ணீர் திருவண்ணாமலை மாவட்ட 2 கோடியே 4 லட்சம் மக்களின் தாகத்தையும் தணிக்கக் கூடியதாக அமைந்தது என்றால் அது மிகையாகாது. 2017ல் திருவண்ணாமலையில் நடைபெற்ற 12வது மாநில மாநாட்டு தீர்மானங்கள் அதன்படி அமைக்கப்பட்ட ஜாக்டோ ஜியோ போராட்ட நடவடிக்கைகள் 7.9.2017ல் இருந்து தொடங்கிய வேலை நிறுத்தம் நீதிமன்ற தடையையும் தாண்டி பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற போராட்டத்தால் தலைமைச் செயலாளரை நீதிமன்றத்திற்கு வரவழைத்த உக்கிரமான போராட்டத்தால் ஊதிய மாற்றத்தை 11.10.2017 ல் பெற்றோர். நீண்ட நெடிய போராட்டம் தொடர் நீதிமன்ற நடவடிக்கைகள் முரண்பாடு களையும் குழு, புதிய பென்சன் திட்டம் ரத்து செய்ய அமைக்கப்பட்ட குழு, ஆட்குறைப்பு நடவடிக்கை குழு என்று தமிழக அரசால் போடப்பட்ட அனைத்து குழுக்களையும் முறைப்படுத்த நாம் தற்போது வரை தொடர் இயக்க நடவடிக்கைகள், கேரளாவை தாக்கிய புயல், தமிழகத்தை தாக்கிய கஜா புயல் இவற்றையெல்லாம் கடந்து திருவண்ணாமலை மாவட்ட சங்கக் கட்டிடப் பணிகள் முழுமையடைவதில் சிரமங்கள் இருந்தாலும் அம்மாவட்டத்தின் மாவட்ட நிர்வாகிகளும், வட்ட நிர்வாகிகளும்,

"காலம் தெரிந்து கூவும் சேவலைக்
கவிழ்த்து போட்டாலும் நிறுத்தாது
கல்லைத் தூக்கி பாரம் வைத்தாலும்
கணக்காய் கூவும் தவறாது"

என்ற மக்கள் கவிஞன் வரிகளுக்கேற்ப தாங்கள் தொடங்கிய பணியில் உள்ள இடையூறுகளை களைந்து முன்னேறிட வழிவகுத்து... அதன்படி சீராய் பயணித்தனர். திருவண்ணாமலை மாநில மாநாட்டில் மாநிலத் தலைவராக பொறுப்பேற்று, ஊரக வளர்ச்சி துறையின் மாநிலத் தலைவராக, ஜாக்டோஜியோவின் ஒருங்கிணைப்பாளராக முப்பெறும் பொறுப்பிலும் முத்தாய்ப்பான வீரம் செறிந்த போராட்ட தலைவரின் பணி ஓய்வும் திருவண்ணாமலையே என்ற உச்சரிப்போடும், குறுகிய நாளிலும் சங்கக் கட்டிடத்தை வேகமாக செதுக்கிட ஒப்புக்கொண்டு கொத்தனார் எஸ்.எம்.முனியப்பன் அவர்களாலும் திருவண்ணாமலை மாவட்டத் தலைவர் ஜோதிசங்கர் தலைமையில் மக்களை நோக்கிய பயணத்தின் மைல் கல்லை தொட்டிட முதலில்

செங்கம் வட்டக் கிளைக்கு கட்டிட பணி நிதி வேண்டி சென்றபோது வட்டத்தின் தலைவர் ராஜேந்திரன் அவர்களால் உற்சாகத்துடன் துவக்கப்பட்ட பணி வேகமாக கீழ்பெண்ணாத்தூர், கலசபாக்கம், ஆரணி, போளூர், வந்தவாசி, செய்யாறு, வெம்பாக்கம், சேத்துப்பட்டு, திருவண்ணாமலை வடக்கு, தெற்கு, தண்டராம்பட்டு என்று 12 கிளைகளிலும் உள்ள வட்ட நிர்வாகிகளாலும் திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகிகளாலும் அவர்களின் பணி செங்கல்லாக, மணலாக, சிமெண்ட்டாக, ஜல்லியாக, கம்பியாக, நீராக அவர்களின் உணர்வால் சங்க கட்டிடமாக மாறியது என்றால் திருவண்ணாமலை மாவட்ட அரசு ஊழியர்களின் ஒற்றுமைக்கு கிடைத்த பணியே ஆகும்.

திருவண்ணாமலை மாவட்டத்தின் முப்பெரும் தேவியர் என்று சொல்லும் அளவுக்கு தண்டராபட்டு வட்டத் தலைவர் மிருணாளினி, மாவட்ட பொறுப்பாளர்கள் பார்வதி, செல்வி ஆகியோர் ஆண் தோழர்களுக்கு சற்றும் சளைத்தவர்கள் அல்லஎன்பதை அவர்களின் துறை சார்ந்த களப்பணிகளே நிரூபித்து காட்டினர். கட்டிடக் குழு பொறுப்பாளர்களான வேங்கடவரதன், மணி திட்டமிடுதல் கூடுதல் சிறப்பாகும். கட்டிட பணிகளை திட்டமிட்டவாறு முடித்திட ஸ்ரீதரன் உள்ளிட்டவர்களின் கூடுதல் முயற்சி கட்டிடக் குழு பொறுப்பாளர்களுக்கு மேலும் உற்சாகத்தையும் திட்டமிட்ட 15 தினங்களில் கட்டிட திறப்பு விழா நடத்துவதற்கு அடித்தளமாக அமைந்தது. பரிதிமாற்கலைஞர், முரளி, சங்கர், காளி 31.5.2019ல் தன்னுடைய அரசு பணியை நிறைவு செய்யும் தோழர் ஸ்ரீனிவாசன் உள்ளிட்டவர்களின் விளம்பர பணிகளும், மாநில மாநாட்டின் உணவு குழு தலைவர் ஜெ.ராஜா தற்போது 29.5.2019 சங்க கட்டிடத் திறப்பு விழா வரை உணவு குழு பணியில் நீடிப்பதும், ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்க தலைவர்கள் பணிகளை ஆதரித்து உற்சாகப்படுத்தியதும்...

"சிட்டுக்குருவியை பழக்க
கற்றுக் கொடுங்கள்அது
வானத்தில் பறக்கும் வல்லூறுவையும்
அடித்து வீழ்த்தும் வல்லமை கொண்டது"

என்ற வரிகளை நினைவுபடுத்தியது. திருவண்ணாமலை மாவட்ட செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் கடந்த 29.5.2019 அன்று மாநிலத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் உள்ளிட்ட மாநில நிர்வாகிகளால் வீரம் செறிந்த வரலாற்றில் பல முத்திரைகள் பதித்த திருவண்ணாமலை மாவட்டத்தில் "சமூக மாற்றத்திற்கான" பல முடிவுகளை எடுக்கவும், புதிய பென்சன் திட்டம் ரத்து உள்ளிட்ட நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் நாடே அறிந்திருந்தாலும் இனி மாநிலங்களவையிலும், மக்களவையிலும் தனித்தே மசோதாக்களை அமுல்படுத்தி, நிறைவேற்ற முடியும் என்று கொக்கரித்து கொண்டிருக்கின்ற மத்திய ஆட்சியாளர்களுக்கும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை நடுத்தெருவில் நிறுத்தியும் சமூக பாதுகாப்பை உறுதியளிக்கும் புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்திட மறுக்கும் மாநில ஆட்சியாளர்களுக்கும் சரியான பாடத்தை புகட்டிட திட்டமிடும் இடமாகவும், அரசு ஊழியர்களின் பயிற்சி பள்ளியாகவும் எதிர்கால அரசு ஊழியர்களை உருவாக்கிட அரசாங்கத்தல் நடத்தப்படும் துறை தேர்வுகளுக்கு திருவண்ணாமலை மாவட்ட அனைத்து தரப்பு மக்களின் இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் இலவச பயிற்சியினை வழங்கிடவும் முதல் தளம் அமைத்திட தயாராகி கொண்டிருக்கிறது.

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பல்லாயிரம் கட்டல்.
அன்ன யாவினினும் நன்று
ஆங்கோர் ஏழைக்கு இலவச
கல்வியை கொடுப்பதே சிறந்தது...
அதனை நோக்கிய பயணத்தில்
திருவண்ணாமலை TNGEA

\- ***எஸ்.தமிழ்ச்செல்வி***

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் கரூர் மாவட்ட செயலாளர் எஸ்.விஜயராகவன் உடல் நலக் குறைவு காரணமாக 28.05.2019 அன்று மறைந்தார். அன்னாரது மறைவிற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கரூர் மாவட்ட, வட்டக் கிளைகள் மற்றும் துறைவாரி சங்கங்களின் சார்பிலும், மத்திய மாநில பொதுத்துறை மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பிலும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மையம் சார்பிலும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com